kids around the world

KIDStory™

# அடிப்படைப் பயிற்சிக் கையேடு

"தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி,
உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்"
சங்கீதம் 145:4

# பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **சிறுவர் கதை பயிற்சி கண்ணோட்டம்** | 4-5 |
| **பகுதி - 1** | |
| • வரவேற்பு | 6 |
| • இயேசு சிறுவர்களை ஆசீர்வதிக்கின்றார் | 6-7 |
| **பகுதி - 2: வேதாகமக் கதை சொல்லுதல் என்றால் என்ன/கதையைக் கற்றுக்கொள்ளுதல்** | |
| • உலக முழுவதும் | 8 |
| • வேதாகமக் கதை கூறல் என்பது என்ன? | 8 |
| • பாட வடிவம் | 9-10 |
| • வித்தியாசம் என்ன / வேதாகம கதை கூறல் ஏன்? | 11 |
| • கதையை கற்றல் | 12-16 |
| **பகுதி - 3: கதையை சொல்லு** | |
| • தேவனுடைய நடை | 17 |
| • வழங்குதல் | 18-19 |
| • சொற்சொடர் அட்டை | 20 |
| **வீட்டு வேலை** | 21 |
| **பகுதி - 4: தியானம்** | 22-23 |
| **பகுதி - 5: மீண்டும் கதையை சொல்லுதல்** | |
| • விளையாட்டுகள் | 24 |
| • கலை, நாடகம், இசை | 25 |
| **பகுதி - 6: தொலைந்துப் போன ஆடு** | 26 |
| **பகுதி - 7: கண்டறியும் பதில் கேள்விகள்** | 27-31 |
| • மாதிரி கேள்விகள் | 29-30 |
| **பகுதி - 8: இறுதி செயல்** | 32-33 |
| • பாடத்திட்ட அட்டவணை | 33 |
| **பகுதி - 9: நிறைவும் அர்பணிப்பும் இணைப்புகள்** | 34 |
| **இணைப்புகள்** | 35 |


© Kids Around the World 2015

# சிறுவர் கதை பயிற்சி கண்ணோட்டம்

பகுதி # 1: வரவேற்பு, இயேசு சிறுவர்களை ஆசீர்வதிக்கின்றார் பக்கம் 6

- – வரவேற்பு
- – பங்குப்பெறுவோரின் வழிமுறைகளும் துவக்கமும்
- – அறிமுக கதை கூறல்
- – கதைப் பலகையுடன் மீண்டும் கதை கூறல்
- – விளையாட்டுடன் மீண்டும் கதை கூறல்
- – கேள்விகள்

அணி
கதைப் பலகை
பந்து

பகுதி # 2: வேதாகமக் கதை என்பது என்ன? பக்கம் 8

- – கதை கூறுவதிலும் ஞாயிறு பள்ளியிலும் உள்ள வித்தியாசங்கள்
- – பாட வடிவம்
- – கதை கூறல் என்றால் என்ன, ஏன்?
- – கதை கூறலும் நீரின்மேல் நடத்தல் பற்றிய அறிமுகமும்
- – கதையைக் கற்றுக் கொள்ளல்
- – கதையை உருவாக்குதல்

கதையாக்கம்

பகுதி # 3: கதை கூறுதல் பக்கம் 17

- – தேவனின் செயல் முறை
- – வழங்குதல்

கடிகாரம்
துணி

பகுதி # 4: தியானப் பக்கம் 22

பகுதி # 5: மீண்டும் கதை கூறல் பக்கம் 24

- கடிகாரம்
- கயிறு (கள்)
- கதைத்தொடர் ஏடுகள்
- க்ரையான்ஸ்
- போஸ்டர் போர்ட்
- ப்ளே ட்டோ (விளையாட்டு மாவு)
- பைப் கிளினர்ஸ்
- கதை சங்கத்தினரின் கதை

- – கதைப் பொருளை அறிமுகப்படுத்துதல்
- – கயிறு / விளையாட்டை உபயோகிப்பது
- – கதைத்தொடர் விளையாட்டுகள்
- – பல குழுக்களாக, மீண்டும் கதை சொல்லுதல் முறைகளை உபயோகிக்க, அப்பியாசப்படுத்த பிரிந்து சொல்லுதல்
    - – ஒரு பாடலை இயற்றுதல்
    - – கதைப் பலகைகள்
    - – பொம்மலாட்டங்கள்
    - – நாடகங்கள் / நடித்தல்
    - – சுவரொட்டிகள்
    - – நடனம் / ஊமை நாடகம்
    - – பைப் க்ளீனர்ஸ் / ப்ளே ட்டோ (விளையாட்டு மாவு)
    - – விளையாட்டு

பகுதி # 6: தொலைந்துப் போன ஆடு பக்கம் 26

பகுதி # 7: கண்டறியும், பதில் கேள்விகள் பக்கம் 27

- கடற்கரை பந்தை

- – தலை & இருதயம்
- – பதில்; நோக்கம்

பகுதி # 8: இறுதி வேலை பக்கம் 32

நிறைவும் அர்ப்பணமும் பக்கம் 34

# பகுதி #1
# வரவேற்பும், இயேசு சிறுவர்களை ஆசீர்வதிக்கின்றார்

**வரவேற்பு:** சிறுவர் கதைப் பயிற்சிக்கு இங்கேயிருக்கும் அனைவரையும் வரவேற்கின்றோம். உங்களை நீங்கள் அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள், சிறு குழுவாக இருக்குமேயென்றால் ஒவ்வொருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும்படி கேளுங்கள், இந்தப் பயிற்சிக்கு வந்ததற்கானக் காரணத்தை பகிர்ந்துக்கொள்ளும்படி கேளுங்கள். நாம் இங்கு இருப்பதற்கான காரணம் சிறுவர் முக்கியமானவர்கள் என்பதாய் நினைக்கின்றோம். தேவனும் அவ்வாறாகவே நினைக்கின்றார். அவர் ஒவ்வொருவரும், சிறுவராயினும், பெரியவராயினும் அவரை தனிப்பட்ட முறையிலே அறிந்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றார். சிறுது நேரத்திலே நான் ஒரு கதையைச் சொல்லப் போகின்றேன். ஆனால் நான் சொல்லுவதற்கு முன்பு நீங்கள் ஒரு பங்காளரை (துணையை) கண்டுபிடித்து நீங்கள் சிறுவராக இருந்தபோது வரவேற்கப்படாதவராக, நேசிக்கப்படாதவராக உணர்ந்த ஒரு சமயத்தைப் பற்றி அவரிடம் பகிர்ந்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

**இயேசு சிறுவர்களை ஆசீர்வதித்த வேதாகமக் கதை சொல்லுதல் ஆரம்பம்**

பங்கெடுப்பாளர்கள் சிறுவராக இருந்தபோது வரவேற்கப்படாதவராக, நேசிக்கப்படாதவராக உணர்ந்த சமயத்தைப் பற்றி மற்றொருவருடன் பகிர்ந்துக்கொள்ளும்படி செய்யவும்.

பங்கெடுப்பாளர் வழிமுறைகளை (பக்கம்-37) வாசியுங்கள், கதை சொல்லப்படும்போது அவர்கள் எவ்வாறு தங்கள் கற்பனைத் திறனை உபயோகித்து அந்த கதை நடைபெறும் இடத்திலே தங்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை மேற்கோளிட்டுக் கூறுங்கள். யாரை, எதை பார்க்கின்றார்கள்? நடந்துக் கொண்டிருப்பதற்கு மக்கள் எவ்விதம் பிரதிக்கிரியை செய்கின்றனர்? ஏதாவது நடப்பதாக உணர்கின்றார்களா? மேலும் எல்லோருமே பங்கெடுப்பதுதான் உங்கள் விருப்பம். உங்களிடத்திலே ஒரு வைரம் இருக்குமேயென்றால், அதை உபயோகித்து, எல்லோருக்குமே கதையைப் பற்றிய ஒரு தனிப்பட்ட கண்ணோடம் இருக்கும். அது கதைக்கு உயிரூட்டுகிறது என்ற எடுத்துக்காட்டைக் கூறலாம்). நாம் நம்முடைய கண்ணோட்டத்தை பகிர்ந்துக்கொள்ளும் போது ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்கின்றோம். நாம் இன்றைய கதையை மட்டும் பார்ப்போம், வேறு வேதாகமக் கதைகளை இன்று பார்ப்பதைத் தவிர்ப்போம். தற்போது கவனித்து, கற்பனை செய்துப் பாருங்கள் – இதை உங்கள் வேதாகமத்திலே வாசிக்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே வேதாகமத்தை கொண்டு வந்திருப்பீர்களேயென்றால் அதை மூடிவைத்துவிடுங்கள்.

**அறிமுகம்:** பெரியோர், சிறியோர் அனைவருடனும் இயேசு சமமாக உரையாடிக்கொண்டிருப்பதைக் காண்கின்றோம். மக்களுக்கு மிகவும் பிடித்தமான சிலரையும் மக்களுக்கு கொஞ்சமேனும் பிடிக்காத சிலரையும் அவர் சந்திக்கின்றார். இயேசு சிலர் தம்மைப் பின்பற்றும்படி அவர்களைத் தெரிந்துக்கொண்டார். அவர்கள் அவருடைய சீஷர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் அவரை (இயேசுவை) போலவே வாழ கற்றுக்கொண்டிருந்தனர். இந்தக் கதையைக் கேளுங்கள், இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒரு குறிப்பிட்ட கூட்ட மக்களை எவ்வாறு நடத்தினர் என்பதைக் கேளுங்கள். இந்த கதை வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டது. எனவே இது உண்மையானதென்று அறிந்திருக்கின்றோம். (இப்போது கதை சொல்லும்போது உங்கள் வேதாகமத்தை மூடி பக்கத்திலே வைத்துவிடுங்கள்).

**கதையை சொல்லு: (மாற்கு 10:13-16)**

ஒரு நாள் சில பெற்றோர், இயேசு தங்களுடைய பிள்ளைகளைத் தொட்டு ஆசீர்வதிக்கும்படி அவரிடமாக அவர்களைக் கொண்டுவந்தனர். ஆனால் அவரை தொந்தரவு செய்கிறதாக கூறி அவருடைய சீஷர்கள் அவர்களை திட்டினர்.

என்ன நடந்துக் கொண்டிருந்தது என்பதை இயேசுக் கண்டபோது, அவர் தம்முடைய சீஷர்களிடம் கோபம் கொண்டார். "சிறு பிள்ளைகள் என்னிடம் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களை தடைசெய்யாதிருங்கள்! பரலோக இராஜ்ஜியம் இச்சிறுவர்களைப் போன்று உள்ளவர்களுக்கே. இந்த சிறுபிள்ளைளைப் போன்று தேவனுடைய இராஜ்ஜியத்தை ஏற்றுக்கொள்ளாதவன், அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உள்ளவர்களுக்கு சொல்லுகிறேன்". பின்னர் சிறுபிள்ளைகளை அவர் தம்மிடமாய் சேர்த்துக்கொண்டு அவர்கள் தலைமேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

**திரும்ப கூறுதல்:** சிறுவர் கதைப் பலகையை அல்லது ஒரு விளையாட்டைக் கொண்டு இந்தக் கதையை திரும்ப கூறு.

**கண்டறியும் கேள்விகள்:**

- இந்த கதை சொல்லப்பட்டபோது எவ்வாறு உணர்ந்தீர்கள்? எத்தகைய உணர்வுகளை அது உண்டாக்கியது?
- இந்தக் கதைப் பற்றிய எந்தக் காரியம் உங்களுக்கு பிடித்தமானதாக இருந்தது?
- இந்தக் கதையிலுள்ள பிள்ளைகளைப் பார்த்தீர்களா? அவர்கள் முகங்களிலிருந்த வெளிப்பாடுகள் என்ன? சீஷர்களுடன் இருப்பதை அவர்கள் எவ்வாறு உணர்ந்தனர்? இயேசுவிடம் இருந்ததை?
- தங்கள் பிள்ளைகளை இயேசுவிடம் கொண்டுவருவதால் அவரிடமிருந்து அவர்கள் பெற்றோர்கள் என்ன எதிர்பார்த்திருந்திருப்பார்கள் என்று நினைக்கின்றீர்கள்?
- பெற்றோர்கள் எவ்வித தெரிந்துக் கொள்ளுதலைக் கொண்டிருந்தனர்? சீஷர்கள்? இயேசு? சிறுவர்கள்? வேறு எவ்விதமான தேர்வுகளை அவர்கள் கொண்டிருந்திருக்கலாம்?
- இந்தக் கதை இயேசுவை பற்றி, தேவனைப் பற்றி கூறுவது என்ன?
- சீஷர்கள் சிறுபிள்ளைகளிடமாய் நடந்துக் கொண்டதைப் போன்று உங்கள் வட்டாரங்களிலுள்ளவர்கள் சிறுவர்களிடமாய் எவ்விதம் நடந்துக்கொள்கின்றனர்? சபையானது அவர்களை இவ்விதமாக நடத்துகின்றதா?
- சிறுவர்கள் இயேசுவிடமாய் வராமலிருக்க அவர்களை சபை எவ்விதம் தடுக்கின்றது?
- நான் அவர்கள் இயேசுவிடம் வராமலிருக்க, எவ்விதம் தடுக்கின்றேன்?

**பதில் கேள்விகள்:**

- பிள்ளைகளைப் பற்றி தேவன் கொண்டிருக்கும் கண்ணோட்டத்தை இந்த கதை எவ்விதம் கூறுகிறது?
- இன்று நீங்கள் பார்த்த, கேட்ட காரியங்களினால் தேவன் உங்களை செய்ய அழைக்கும் காரியம் என்ன?
- இந்த கதையின் மூலமாகவும், நம் கலந்துரையாடல்களின் மூலமாகவும் நீங்கள் கற்றுக்கொண்டிருக்கும் காரியங்களின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் கேட்பது என்ன என்று உணர்கின்றீர்கள்?

## பகுதி #2

# வேதாகமக் கதை கூறல் என்பது என்ன? / கதையைக் கற்றுக்கொள்ளுதல்

ஒரு ஞாயிறு பாடசாலையில் கதை கூறுவதற்கும், வேதாகமக கதை கூறுதலில் கூறப்பட்ட கதைக்கும் இடையே காணப்பட்ட வித்தியாசங்களைப் பற்றி பங்கெடுத்தவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை பகிர்ந்துக் கொள்ளுதலுடன் இந்தப் பகுதியைத் தொடங்கவேண்டும்.

**வேதாகமக் கதை கூறல் என்பது என்ன?**

வேதாகமக் கதை கூறல், ஒரு கதை கூறலை விட வித்தியாசமானது. இங்கே கற்றுக் கொள்ளும் சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது, இதனால் மக்களின் இருதயங்களிலே பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய ஏதுவாகின்றது. இதனால் அவர்கள் தனிப்பட்ட விதமாக தேவனை அறிந்துக்கொள்கின்றனர், அவரை பின்பற்றுதல் என்ன என்பதை உணர்ந்துக் கொள்கின்றனர், அவருடைய வார்த்தையை கற்றுக்கொள்கின்றனர் இதனால் அவருடைய கதை மீண்டும் மீண்டுமாக கூறப்படுகிறது. சிறுவர்கதை என்பது சிறுவர்களை இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாக்க அவர்களை சென்றடையும் வாஞ்சையுள்ள உங்களைப் போன்ற பிறரை பயிற்றுவிப்பதாகும். (அவரின் கதையைக் கூறுவதின் மூலமாகவும் கலந்துரையாடலின் மூலம் அனுபவங்களைப் பகிர்ந்துக் கொள்வதின் மூலமாகவும் தேவனையும் அவருடைய வழிகளையும் அறிந்துக் கொள்ளுவதாகும்).

**உலக முழுவதும்**

நீங்கள் இந்த உலகத்திலே எங்கு சென்றாலும், எல்லோருக்குமே எல்லா இடத்திலுமே பொருந்தக் கூடிய சில காரியங்கள் இருக்கின்றது. எந்த கலாச்சாரத்தை சார்ந்தவராக நீங்கள் இருப்பினும், எல்லா வயதினருக்கும் பொருந்தக் கூடிய ஏற்புடைய காரிங்கள் இருக்கின்றது. உலகினர் அனைவருக்கும், அனைத்து இடங்களுக்கும் பொருத்தமான காரியங்கள். தேவனுடைய வார்த்தையை சிறுவர்களுக்கு நாம் கற்றுக்கொடுக்கையிலே இந்த காரியங்களெல்லாம் எவ்வளவு முக்கியமானவைகளாக மாறுகின்றது என்பதை நாம் காண்போம். அத்தகைய காரியங்களில் சில:

- குடும்பம் (உடைமை)
- இசை
- விளையாட்டுகள் / கேளிக்கைகள்
- கலைகள் (ஓவியம், நாடகம், நடனம்)
- கதைகள்

(நம்முடைய கதையிலே தேவன் அழகை கொண்டுவர வேண்டுமென்று விரும்புகின்றோம். ஆனால் தேவன் இல்லாத நம் கதை உங்களுக்கு அற்பமானதொன்றாகும். தேவனை நம்முடைய சிறிய அற்பமான கதைக்குள் சுருங்கிக் கொள்ளும்படி கேட்பது தேவனுடைய நேரத்துக்கும் நம் நேரத்திற்கும் தகுந்ததாக இராது. ஆனால் நீங்கள் தேவனுடைய கதைக்குள்ளே செல்வீர்களென்றால் – உங்கள் வாழ்க்கைக்கு, அவருடைய விளக்கங்களுக்குள்ளே செல்வீர்களென்றால் நீங்கள் ஒரு பிரம்மாண்டமான கதைக்குள்ளே நுழைகின்றீர்கள், அதில் துயரங்களினூடேயும் அழகு தென்படுகின்றது – எரிவின் மேக் மேனஸ்)

**பாட வடிவம்**

ஒரு நல்ல பாடம் எவ்வாறு இருக்கின்றது? இயேசு சிறுவர்களை ஆசீர்வதித்த கதையை எப்படி சொன்னோம் என்பதைப் பார்க்கலாம்.

- ஆரம்பம்: இது மக்கள் ஒருவருடன் ஒருவர் சம்பாஷித்து தங்கள் தனிப்பட்ட அல்லது தங்களைப் பற்றிய கதையை பிறருடன் பகிர்ந்துக் கொள்ளும் நேரமாகும். இது கதையுடன் எந்தவிதத்திலும் தொடர்பு இல்லாத ஒரு கேள்வி அல்லது செயல்முறையாகும். ஆனால் மக்களை கதையின் திசைக்கு நேராகத் திரும்பக் கூடியது. உங்களுக்கு அருகிலிருப்பவரிடம் நீங்கள் ஒரு சிறுவராக பிறரால் வரவேற்கப்படாத,, நேசிக்கப்படாத நேரங்களைப் பற்றி பகிர்ந்துக் கொள்ளவேண்டும் என்று கூறினேன். பின்னர்...

- அறிமுகம்: இது எல்லோரையும் தேவனுடைய கதையை கேட்பதற்கு ஆயத்தப்படுத்துகிறது. மக்களை கதைக்கு ஆயத்தப்படுத்த ஏதாவதொரு கூற்று கதைக்கு முன் கூறப்படுகிறதா? கதையை இன்னும் நன்றாக விளங்கிக்கொள்ள, அல்லது முந்தைய கதையையும் தற்போதைய கதையையும் இணைக்கும் வகையில் கையாளக் கூடிய விபரங்கள் ஏதேனும் உண்டா? இன்று காலையில் நான் சொன்ன கதையிலே, சீஷர்கள் யாரென்றும், இயேசுவும், சீஷர்களும் ஒரு குறிப்பிட்ட குழுவினரை எவ்விதம் நடத்தினர் என்பதையும் நான் சொன்னேன். இப்போது நான் சொல்லுவது என்னவென்றால்...

  குழுவினருக்கு ஆரம்பம் மற்றும் அறிமுகம் இவற்றை வேறுபடுத்திக் கொள்வதில் ஏதேனும் பிரச்சனை இருந்தால், பக்கம் 10ல் கொடுக்கப்பட்டிருக்கும் பயிற்சிகளை வாசியுங்கள். வாக்கியத்தை வாசித்தப் பின்னர் அவர்கள் அதை தெளிவாக கூறவேண்டும்.

- **கதையை சொல்:** இந்த கதை வேதாகமத்திலிருக்கிறதென்றும், அது உண்மையானதென்று நேயர்களிடம் கூறுவது மிகவும் முக்கியமானதாகும். மக்கள் இந்த தருணத்திலே தங்கள் வேதாகமத்தை மூடிவைத்திருக்க வேண்டும், கதையின் மேலும் கதையை சொல்பவர் மீதும் தங்கள் கவனத்தை வைக்கவேண்டும். பின்னர் இந்தக் கதையை மீண்டுமாக சொல்ல வேண்டும்.

- **கதையை மீண்டும் சொல்லுதல்:** சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதற்கோ அல்லது துல்லியமான விளக்கங்களுக்காகவோ மக்கள் அந்த கதையை மீண்டுமாக சொல்லுவது மிகவும் முக்கியமானதொன்றாகும். இதை செய்யும் முறைகளில் ஒன்று பங்கெடுப்போர் தங்கள் வேதாகமத்தை திறந்து, அதினின்று அந்த கதையை வாசிக்க வேண்டும். ஒருவர் அந்த கதையை வாசிக்க வேண்டும் அல்லது நடத்துனர் சில கேள்விகளைக் கேட்கலாம் அதற்கு அவர்கள் வேதத்திலிருந்து பதிலை சொல்ல வேண்டும். பங்கெடுப்போருக்கு தனிப்பட்ட விதத்திலும், குழுவாகவும் சில செயல்முறைகளைக் கொடுத்து அதனை செய்ய சொல்லலாம். இயேசு சிறுவர்களை ஆசீர்வதிக்கும் கதையிலே, ஃபளானல் கதைப் பலகையைப் கொடுத்து அவ்வாறாக செய்ய சொன்னோம். நீங்கள் ஒரு விளையாட்டையோ, பாடலையோ, அல்லது செயல் முறைகளையோ கொடுத்து செய்ய சொல்லலாம். இவற்றில் சிலவற்றை நாம் இந்த பயிற்சியிலே பயிலுவோம்.

- **கண்டறியும் மற்றும் பதில் கேள்விகள்:** கற்றுக்கொள்ளும் ஒழுங்கிலே, கேள்வியைக் கேட்பதும், கதையைப் பற்றி பேசுவதும் மிகவும் முக்கியமானதாகும்! நாம் உணர்வுகளைப் பற்றியோ இருதய நிலையைப்பற்றியோ பேசாமல் கதையைப் பற்றிய உண்மைகளை மட்டுமே கற்றுக் கொடுப்பதற்கு பழகியிருக்கின்றோம். ஒரு தலைவர் உண்மைகளை நினைவுறுத்துவதுடன் தேவன் உங்கள் இருதயத்திலும், வாழ்க்கையிலும் செய்துக்கொண்டிருப்பதற்கு நேராக அந்தக் குழுவை நடத்திச் செல்ல வேண்டும். பதில் கேள்விகளிலே, உங்கள் குழுவிலுள்ள ஒவ்வொருவருடனும் பரிசுத்த ஆவியானவர் பேசும்படியாக நீங்கள் ஜெபிக்கத்தக்க ஒன்று அல்லது இரண்டு கேள்விகள் இருத்தல் வேண்டும். பாடத்திட்டத்திலே, படித்துக் கொள்ளவேண்டிய ஒரு செயல்முறை இருத்தல் வேண்டும். இது கதை கூறுதலில் வேறுபடுகிறது. பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவருடனும் அவர்களுக்கு ஏற்றவிதமாக பேசவேண்டும் என்ற விரும்புகின்றோம். உங்கள் குழுவினரிடமிருந்த பல்வேறுவிதமான பதில்களைப் பெற்றுக்கொள்ளுதல் சாதாரணமானதொன்றே. அது நல்லது. தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கேற்ற கீழ்ப்படிதலில் ஒவ்வொருவரும் எந்த நிலையிலிருக்கின்றனர் என்பதை பின்வரும் வாரங்களில் கண்டறிய வேண்டும்.

### தொடக்கமும் அறிமுக கூற்றுக்களும்

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பல்வேறு கூற்றுக்களையும் வாசியுங்கள், பங்கொடுப்பாளர்கள் அந்த கூற்று தொடக்கக் கூற்றா அல்லது அறிமுக கூற்றா என்பதை கூறும்படி செய்யுங்கள்.

| தொடக்கம் | அறிமுகம் |
|---|---|
| • நீங்கள் எப்போதாவது தொலைந்து போயிருக்கின்றீர்களா? | • ஒரு சமாரியன் யூதா ஜனங்களாலே விரும்பப்படமாட்டான். |
| • பிறறொருவர் உங்களுக்கு உதவ அவர்களை நம்பியிருந்தது எப்போது? | • இயேசு ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுக்க, உபயோகித்த கதை தான் உவமை. |
| • நீங்கள் தொலைத்துவிட்டால் உங்களை அதிகமாக துக்கத்துக்குள்ளாக்கும் காரியம் எது? | • தொழுநோயானது இன்றைய காலகட்டத்திலே குணமாக்கக் கூடிய ஒரு நோயாகும். ஆனால் இயேசு இவ்வுலகத்திலே இருந்தபோது, அதைப் பெற்றிருந்தவரிடமிருந்து பெற்றுக்கொள்வோமோ என்று மக்கள் பயப்பட்டனர். உங்களுக்கு அது இருக்குமேயென்றால் நீங்கள் தனியாக வாழ வேண்டும். |
| • நீங்கள் உண்மையாகவே பயந்திருந்த சமயம் எது என்பதை சொல்ல இயலுமா. | • இந்தக் கதைக்கு முன்பு இயேசு 5000 மக்களை போஷித்ததைக் காண்கின்றோம். |
| • இந்த உலகத்திலே நீங்கள் எங்கே செல்ல வேண்டுமென்றாலும் செல்லலாம் என்ற நிலையிருந்தால் எங்கே செல்வீர்கள். | |

### வித்தியாசம் என்ன:

வேதாகமக் கதையானது வேதாகமத்தோடு தொடங்கி, பரிசுத்த ஆவியானவர் போதகராக இருக்கும்படி ஏதுவாக்குகின்றது. ஒரு தலைவரின் பங்கு அது நடைபெற உதவுவதேயாகும், அவர் ஒரு வேதாகமப் போதகரன்று. அப்படி யென்றால் என்ன? நாம்...

- கண்டறிந்து அனுபவித்தலும் விளக்கமளித்தலும்: தலைவரானவர் பங்கெடுப்பாளர்கள் வேதாகமத்துக்குள்ளும் அந்த கதைக்குள்ளும் செல்லும்படி உதவ வேண்டும், அந்த பகுதி என்ன என்பதைப் பற்றி கற்றுக்கொடுக்கவோ விளக்கமளிக்கவோ தேவையில்லை.
- உதவுதலும் கற்றுக்கொடுத்தலும்: ஒரு சிறு குழுத் தலைவராக இருப்பவருக்கு இது மிகவும் கடினமானதாக இருக்கக்கூடும். சில கலந்துரையாடல்களும், கேள்வி பதில்களும் நடை பெறுவதற்கு ஏற்றவிதமாக எல்லாமே கதைக்குள்ளாகக் கொண்டுவரப்படுகின்றது.
- கவனித்தலும் பேசுதலும்: ஒரு தலைவராக, நீங்கள் பரிசுத்த ஆவியானவருக்கும், பங்கெடுப்போருக்கும் செவிகொடுக்கும் நிலையிருக்க வேண்டும், பதில்களை கொடுக்க வேண்டுமென்ற ஆர்வத்துடன் இருத்தல் கூடாது.
- கதையும் பிரசங்கமும்: கதைகள் கலந்துரையாட ஏதுவானவைகள், பிரசங்கமோ ஒருவழி சம்பாஷனையாகும்.

### வேதாகம கதை கூறல் ஏன்?

பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க நாம் ஏன் பைபிள் கதை சொல்லுதலை உபயோகிக்கின்றோம்?

- உலகிலே 2/3 க்கு மேலானோர் வாசிப்பதில்லை. அவர்கள் கதைகளின் மூலம் கற்றுக் கொள்கின்றனர்.
- இயேசு எப்போதுமே உவமைகள் / கதைகள் மூலம் கற்றுக்கொடுத்தார் (மத்தேயு 13:34).
- பைபில் 75% அதிகமானது கதைகளே.
- என்னுடைய வார்த்தைகளைவிட தேவடைய வார்த்தை அதிக வல்லமையுள்ளது.
- தேவனுடைய வார்த்தை ஆவியானவரின் மூலமாக மக்களின் வாழ்க்கையை மாற்றுகிறது.
- உலக முழுவதிலும், மக்கள் கதைகளை விரும்புகின்றனர். அதை நீங்கள் எங்கேயும், எவருடனும் உபயோகிக்கலாம்.
- மக்கள் தேவனுடைய வார்த்தையை அறிந்து அவருடன் இன்னும் நெருக்கமாக இருக்கலாம்.
- தேவனுடைய கதையை அறிந்திராதவரிடம் பிள்ளைகள் அதை பகிர்ந்துக் கொள்ளலாம்.

### இயேசுவும், பேதுருவும் தண்ணீர்மேல் நடந்த கதை (மத்தேயு 14:22-23)

நாம் சேர்ந்து ஒரு பாடத்தை ஆயத்தம் செய்வோம்: பங்கெடுப்பாளர்களை 3-4 பேர் குழுவாக பிரிக்கவும். இந்த குழுவினர் மத்தேயு 14:22-23ல் இருக்கும், இயேசுவும் பேதுருவும் தண்ணீர்மேல் நடந்த கதையை வாசிக்க வேண்டும். அவர்கள் தங்கள் குழுவிற்கு செல்லும் முன்னர் கதையை சொல்லலாம். அவர்கள் அதை படித்த பின் ஒரு ஆரம்பம் மற்றும் அறிமுகம் இவற்றை அவர்கள் கூறவேண்டும்.

## கதையை கற்றல்

இப்போது கதையை கற்றுக் கொள்ளவேண்டிய வேளை. இது சொல்லப்பட வேண்டிய கதை, நினைவில் கொண்டிருக்க வேண்டிய உண்மை விபரங்கள் மட்டுமல்ல, என்பதை நினைவில்கொள்ளுங்கள். இங்கேயிருந்து நீங்கள் உங்கள் வீடுகளுக்கு சென்று. உங்கள் அனுபவங்களையெல்லாம் சொல்வீர்கள் என்றால், அவற்றையெல்லாம் மனப்பாடம் செய்து சொல்வீர்களா! இல்லை! நீங்கள் மதில் வைத்திருக்கின்றீர்கள். தேவனுடைய கதை என்று வரும்போது அது ஏன் வேறே மாதிரியாக இருக்க வேண்டும்? நாம் அவருடைய கதையை உற்சாகத்துடனும், மலர்ச்சியுடனும் நம் நேயர்களுடன் ஜீவனோடு பகிர்ந்துக் கொள்ளவேண்டும். நம் பிள்ளைகள் அந்த கதையிலே தேவன் யார் என்றும், அவர் எப்படி கிரியை செய்கிறாரென்றும் அறிந்துக்கொள்வதோடு அதை பிறரிடம் மீண்டுமாக சொல்லவேண்டும் என்று விரும்புகின்றோம்!

## உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்துங்கள்

பரிசுத்த ஆவியானவரை கேட்டு, அவருக்கு பிரதிகிரியை செய்யத்தக்க நிலையிலே உங்கள் இருதயம் இருக்கின்றதா? இல்லையெனில் அப்படிமாற தேவையானது என்ன?

- ஜெபம்: நீங்கள் தேவனிடம் பேசும் போது அவர் உங்களுடன் பேச நீங்கள் அனுமதிக்கின்றீர்களா?
- கதையை வாசியுங்கள்: அந்த கதையை நீங்கள் பலமுறை வாசிக்கவேண்டும், வேறு மொழிபெயர்பு இருக்குமேயென்றால் அவற்றிலேயும் வாசியுங்கள். தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துகிறது என்ன? இந்தக் கதையிலே, யாருடன் உங்களை பொருத்திக் கொள்கின்றீர்கள்? பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தை ஆயத்தப்படுத்துகையிலே இதைதான் அவர் உங்களுக்கு காட்டுகின்றாரென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கதைசொல்லும் குழுவில் உள்ள ஒவ்வொருவரிடமும் ஆவியானவர் பல்வேறு விதமான காரிங்களைப் பேசுவார்.
- கண்ணோட்டங்கள்: கற்றுக்கொடுக்கப்படவேண்டிய வேதவாக்கியங்களை பற்றி யோசித்துப் பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வேளிப்படுத்துவது என்ன? பங்கெடுப்பாளர்கள் கேட்டு, கற்றுக்கொள்ள வேண்டியவை என்ன? அங்கே இருப்பபதைப் போன்று கற்பனை செய்துக் கொள்ளுங்கள். நீங்கள் பார்ப்பது, முகர்வது, கேட்பது, உணர்வது என்ன? கதா பாத்திரங்கள் யார், சூழ்நிலையைப்பற்றிய அவர்களின் கண்ணோட்டங்கள் என்ன? தேவனுடைய கண்ணோட்டம் என்ன? யார்? என்ன? எப்போது? எங்கே? ஏன்? எப்படி? என்ற கேள்விகளைக் கேளுங்கள், உடல்ரீதியாக உங்களை நீங்கள் அங்கே வைத்து, அந்த கதையை ஒரு 3வது நபர் கூற்றில் கூறுக.

**கதையைப் பிரித்து ஆராயுங்கள்**

கதையை நினைவில் வைத்துக்கொள்ளும் சில வழிகள் என்ன? 4 அல்லது 5 ‘அத்தியாங்களாக’ அல்லது காட்சிகளாக அதைப் பிரித்துக்கொள்வது சிறந்தது. ஒவ்வொரு காட்சியையும், சூழ் நிலையையும் உங்கள் மனதிலே நீங்கள் பார்க்கும்போது, நீங்கள் கதையின் விளக்கங்களைப் பூர்த்தி செய்துக்கொள்ள முடியும்.

கதையை வேதாகமத்தில் இருக்கும் வண்ணமாக சொல்ல வேண்டுமென்பது மிக முக்கியமானதாகும். அது வேதாகமத்தின் படி மிகத் துல்லியமாக இருத்தல் வேண்டும். அப்படியென்றால் நாம் நம்முடைய வார்த்தைகளையோ விளக்கங்களையோ அந்த கதையில் சேர்த்தல் கூடாது! கேட்பவர்கள் கதைக்குள் சென்றுவிடும்படி அதை நினைவில் கொள்ளும் வரையில் மாற்றவேண்டும். இவையனைத்திலும் நம் வார்த்தைகளுக்கல்ல தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாக இருத்தல் வேண்டும். இறுதியாக, எல்லோருமே வேறொருவருடன் அதை சொல்லுவதற்கு நன்றாக கற்றுக் கொள்ள வேண்டும்.

கதையைக் கற்றுக் கொள்ள சில வழிகள். கதையைக் கற்றுக்கொள்ள இது சரியானது, இது தவறானது என்று எந்த வழியும் கிடையாது. உங்களுக்கு சரியாக இருக்கும் ஒரு வழியை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

- வாசித்தலும் சொல்லுதலும்: கதையை வாசியுங்கள், வேதத்தை மூடிவைத்து விட்டு கதையை சத்தமாக கூறவும். நீங்கள் எவ்வளவு துல்லியமாக இருந்தீர்களென்பதைக் கண்டுகொள்ள கதையை மீண்டுமாக வாசியுங்கள். இதை பலமுறை செய்யுங்கள்.
- நீகழ்வுகளைப் பட்டியலிடுங்கள்:
- மனப் பாடங்கள்: (பக்கம் 14)
- கதை வரைதல்: (பக்கம் 15)
- அறை அமைப்புகள்: வேதாகமக் கதாப்பாத்திரங்களின் அல்லது பல்வேறு காட்சிகளின் அசைவுகளைக் காட்ட அறைக்குள்ளே அசைவுகள் அல்லது இடமாற்றங்கள் நிகழ்த்தவேண்டும். அதை சொல்லும் போது உங்களை நீங்கள் அந்த இடத்திலே வைத்துக்கொள்ளுங்கள்.
- கை சைகைகள் / அசைவுகள்: எடு உலகத்தை படைத்தல் என்பது, உங்கள் கைகளால் ஒரு வட்டத்தை உருவாக்குதல்.
- முக்கிய வார்த்தைகள்: ஒவ்வொரு பகுதிக்கும் அல்லது காட்சிக்கும்.
- காட்சிக்கு: யூ ட்யுப் காட்சிகள், ஃளானல் கதைப் பலகைகள், சிறுவர் கதைப் புத்தகங்கள், பத்திரிக்கைகள்.

இது கதையின் வார்த்தைகளை பற்றியது அல்ல, ஆனால் உங்கள் மனதிலுள்ள படங்களைக் கொண்டு கதைக் கூறுதல். இது நல்ல பலனுள்ளது தான்!

ஒரு பயிற்சியாளராக, கதையை நினைவில் வைத்துக்கொள்ள உங்களுக்குதவும் வழியை நீங்கள் தெரிந்துக்கொள்ளவேண்டும். நீங்கள் பயிற்றுவித்துக் கொண்டிருப்பவர்களும் அவர்களுக்கு சிறப்பாய் உதவும் காரியங்களை தெரிந்துக்கொண்டு அவர்கள் பயிற்றுவிக்கும் போது அவற்றை உபயோகிக்க அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். கதையை சொல்லும்போது நீங்கள் உபயோகிக்கும் முறைகளை நீங்கள் பயன்படுத்தும்படி பார்த்துக் கொள்வது முக்கியமாகும். சில முறைகளைப் பற்றி அறிந்துக்கொள்ளுதல் உங்களுக்கு சுலபமானதாகவும், சவுகரியமானதாகவும் இருக்கக் கூடும். பங்கெடுப்பாளர்கள் தங்களுக்கு சிறந்தது என்பதை கண்டுபடிக்க அனுமதியுங்கள். இது பிள்ளைகள் கதையை திரும்ப சொல்லுதலுக்கம் பொருந்தும். கற்றுக்கொள்ளும் முறைகளில் வேறுபடும் பிள்ளைகளுக்கு ஏற்றார் போல் பல்வேறு முறைகளை உபயோகிக்க வேண்டுமென்பதை நினைவில் கொள்ளுங்கள்.


கதை

# கதை வரைதல்

வேதாகமக் கதை ______________________

வேதாகம ______________________

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

**கதையை வனைதல்**

வனைதல் என்பது ஏதோவொன்றை எடுத்து அதை அர்த்தமுள்ளதாகவும், உபயோகமானதாகவும் மாற்றுவதாகும். அது விபரங்களை கவனத்துடனும், திறமையுடனும் கையாளுவதாகும். வேதாகமக் கதை சொல்லுதலில் ஒரு கதையை நாம் வனையும்போது, வேதவாக்கியங்களை மனனம் செய்து சொல்லுவதில்லை ஆனால் கீழ்கானும்வற்றிற்கு கவணம் கொடுத்துக் கதையை சொல்லுவதாகும்:

- அறிவு யூகிக்கப்படுகிறது: வேதாகம ஆக்கியோா், வாசிக்கின்றவர்களுக்கு அந்த காலத்திலிருந்த கலாச்சாரத்தைப்பற்றி அறிந்திருப்பார்களென்று நினைத்து எழுதினர். உதாரணமாக, நல்ல சமாரியன் உவமையிலே, சமாரியர்கள் மேலிருந்த வெறுப்பை யூதர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் அதை அறிந்திருந்தனர், ஆனால் நாம் அறியோம். இந்த விபரத்தை அறிமுகம் பகுதியிலே சொல்ல வேண்டும். தேவைப்படுமேயென்றால், உங்கள் வாக்கியத்தை நிலைநிறுத்த வேறே வேதவாக்கியப் பகுதியை உபயோகிக்கவும்.

- தகுந்த வயது: பிள்ளைகளுக்கு விளக்கிக் கூறினாலொழிய விளங்கிக்கொள்ள இயலாத வார்த்தைகளும், கருத்துக்களும் கதையிலே உள்ளதா? பிள்ளைகள் அறிந்துக் கொள்ளதக்கதொன்றை அதற்கு பதிலாக உபயோகிக்கலாம். ஆனால் வேத நுனுக்கங்கள் சரியாக இருக்கவேண்டும் அல்லது அறிமுகப்பகுதியிலே இதைப் பற்றிய விளக்கம் அளித்துவிடலாம்.

- தேவைப்படாதவை: சில விபரங்கள் கதையை சுவாரஸ்யம் இழக்கச் செய்துவிடும். இதனால் முக்கியமானதை மக்கள் இழந்துவிடுவர். உதாரணமாக கதையில் உள்ள பெயர்கள், எண்கள், இடங்கள் போன்ற முக்கியமற்ற சில காரியங்கள் பங்கெடுப்பாளர்களை திசை திருப்பிவிடும்.

- ஆரம்பம் மற்றும் நிறைவு வாக்கியங்கள்: எத்தகைய பின்னனி விபரங்கள் தேவைப்படுகின்றது; முந்தைய கதையிலிருந்து ஏதாவது தொடர்பு தேவைப்படுகின்றதா?

- கலாச்சார மனவருத்தங்கள்: கதையிலிருக்கும் பங்கெடுப்பாளர்களை புண்படுத்தக்கூடிய சில காரியங்களைப் பற்றி கவனமாக இருங்கள். (கிணற்றண்டையிலிருந்த பெண்ணுடன் இயேசு தனித்திருந்தது).

ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் கதையை 10 நிமிடங்களாவது வாசிக்க சொல்லுங்கள். அவர்கள் மற்றொருவருடனோ அல்லது அவர்களது சிறு குழுவினரிடமோ கதை சொல்லும்படியான சந்தர்ப்பத்தைக் கொடுங்கள். வார்த்தைகளெல்லாம் சரியானதாக இருப்பதற்கு கவனம் கொடாமல் கதையை அனுபவித்து சொல்லவேண்டிய அவசியத்தை வலியுறுத்துங்கள்.

# பகுதி #3
# கதையை சொல்

### தேவனுடைய நடை

பிள்ளைகளை வேதாகமக் கதைக்குள்ளாக கொண்டுசெல்ல, கதையை உயிருள்ளதாக மாற்ற நாம் கதைசொல்லும் முறையிலே முறையிலே சிலகாரியங்களை புகுத்திக்கொள்வோம். நாம் வேதாகமம் சொல்லுவதற்கு 'துல்லியமாக' இருக்கவேண்டும், அதில் நாம் எதையும் சேர்த்துக் கொள்ளக் கூடாது. தேவன் தம்முடையக் கதையை எப்படி சொன்னார் என்ற சில அடிப்படைகளைக் காண்போம். அவைகள் இவ்வாறு இருக்கும்படி செய்தார்.

- நினைவிலிருக்கும்படி: தேவன் தம்முடைய செய்திகளை நீங்கள் மறக்க இயலாத வகையிலே கொடுக்கின்றார்; அவை நாம் அந்தக் கதையை அனுபவிக்கும்படி செய்கின்றது. சில உதாரணங்களாவது: பெருவெள்ளத்திற்குபின் வானில் தேவன் வைத்த வானவில் மற்றும் தோமா இயேசுவின் கரங்களிலிருந்த துளையை தொட்டு உணர்வது போன்றவை.
- எதிர்பார்த்திராதபடி: சில சமயங்களிலே செய்திகளானது எதிர்பாராதவிதமாக வருகின்றது. சில உதராணங்களாவது: பிலேயாமும் கழுதையும், மோசேயும் எரியும் முட்புதரும், சவுல் குருடாக்கப்படுவது, வேதத்திலே கொடுக்கப்பட்டிருக்கும் பல்வேறு விதமான சுகமாகுதல் (நாகமான், முடவன், குருடன்) நாம் எங்கே சந்திக்கின்றோம் என்பதைப் பொருத்து இடங்களை மாற்றியமைத்துக் கொள்ளலாம், இருக்கை வடிவங்களையும் விளக்குகளைக் கொண்டோ அல்லது இன்றியோ பலவிதமான மனநிலைகளையும் மாற்றியமைத்துக்கொள்வோம்!
    - காட்சி: நாம் விசேஷமாக காட்சி காணும் மக்களாவோம், எனவே கதையைப் பார்க்கும்படி செய்வது நமக்கு நன்மைப்பயக்கும்.
        - பொருள்:

ஒவ்வொரு குழுவிற்கும் பல்வேறு விதமானப் பொருட்களை கொடுத்து, அதை இயேசுவைப் பற்றியும், நீர்மேல் நடக்கும் பேதுருவைப் பற்றிய கதையையும் சொல்ல எவ்வாறு உபயோகிக்கலாம் என்பதை கண்டுபிடிக்க செய்யவும்.

- சிறுவர்களின் கதைப் பலகை (இதைப் பற்றி நாம் பின்னர் பார்க்கலாம்)
- உடைகள்

- தொடுதல்: உதாரணங்கள்: பிடித்துப் பார்க்கவோ அல்லது பிறரிடம் கொடுக்கக் கூடிய பொருட்கள், சிறுவர்கள் மேல் தண்ணீர் தெளிப்பது.
- கேட்டல்: உதாரணங்கள்: சத்தங்கள் ஏற்படுத்துதல், கைகளை உரசி தேய்த்து மழை போன்ற சத்தத்தை ஏற்படுத்துதல்.
- மோப்பம்: உதாரணங்கள்: வாசனைப் பொருட்களை எரித்தல், பார்ப்பதற்கும், முகர்வதற்கும் மீனைக் கொடுக்கலாம்.
- சுவைத்தல்: உதாரணங்கள்: சுவைக்க உணவை (மன்னா) கொடுக்கலாம்.

- வாழ்ந்து காட்டு: இயேசு தம் சீஷர்களுடன் வாழ்ந்துக் காட்டினார். அவர் அவர்களுக்கு கற்று மட்டும் கொடுக்கவில்லை அதை மாதிரியாக செய்தும் காண்பித்தார். அவர் தம்மை தாமே உயர்த்திக் கொள்ளவில்லை, ஆனால் அவர்களுக்கு ஊழியம் செய்தார். நாம் இதை எவ்வாறு செய்ய இயலும்? அநேக சமயங்களிலே நம் செயல்களும் மனப்பான்மைகளுமே இயேசு யார் என்பதையும், வேதாகமக் கதைகளிலே அவர் எவ்விதம் மக்களுக்கு பிரதிக்கிரியை செய்தார் என்பதையும் பிள்ளைகள் விளங்கிக்கொள்ள உதவும்.

சிறு குழுவிலுள்ள மக்களுக்கு, பல்வேறு உணர்வுகளை உபயோகித்து பல வேதாகமக் கதைகளை அவர்கள் சொல்ல அவர்களுக்கு கால அவகாசமாக மூன்று நிமிடங்களை அவர்களுக்குக் கொடுக்கலாம்.

### கதை சொல்ல பல்வேறு வழிமுறைகள்

- முதல் நபர்: கதையிலே நீங்கள் உங்களை ஒரு கதாபாத்திரமாக கருதிக் கொள்ளலாம்
- மூனறாம் நபர்: கதை சொல்பவராக
- கலை பொருட்கள்: காகிதம், வண்ணக் க்ரையான்கள், மார்க்கார்கள்
- பொருட்கள்: துணிகள், தெளிக்கும் குப்பிகள்
- நாடகம்
- கை சைகைகள்
- நேயர்களின் பங்கெடுப்புகள்
- ஒருவர் கதையை வாசிப்பார் மற்றவர் அதை நடித்துக்காட்டுவார்.

வழங்குதல்:

- அசைவுகள்: உங்கள் இருக்கையிலேயே அமர்ந்திராதிருங்கள். ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்ந்து செல்லுதல் செய்யத்தகுந்ததே. விசேஷமாக கதை அவ்வாறிருக்குமேயென்றால் சாலச்சிறந்ததே.
- முகத்தோற்றம்: உங்கள் முகத்தோற்றம் கதையை நம்பவைக்கின்றது; உங்கள் முகத்தோற்றத்திலே அதை வெளிப்படுத்துவீர்களென்றால் வார்த்தைகளால் நீங்கள் அதிகம் வர்ணிக்கத் தேவையில்லை. பங்கெடுப்பாளர் தங்கள் துணைவரிடமாய் திரும்ப வேண்டும். அடுத்த பக்கத்திலே உள்ள முகத்தோற்ற அட்டவணையிலுள்ள 5 முகத்தோற்றங்களை தெரிந்துக் கொள்ளவேண்டும், அடுத்தவர் அதை வெளிப்படுத்தவேண்டும். பின்னர் அடுத்தவர் அதை செய்ய வேண்டும். ஒருவர் ஒரு முகத்தோற்றத்தை வெளிப்படுத்த வேண்டும். அடுத்தவர் அது என்னவென்று சொல்ல வேண்டும். இப்படியும் செய்யலாம்.
- நேயர் / பார்வையாளர் பங்கு: சில சமயங்களிலே, சில அல்லது எல்லா சிறுவர்களும் கதை சொல்லுவதிலே ஈடுபடுவது சுவாரஸ்யமானது. இது
    - பங்கெடுப்போர் சொல்ல அல்லது பதிலளிக்கக் கூடிய மீண்டும் மீண்டுமாக வரும் வார்த்தைகள் / பதங்கள்.
    - கை/ உடல் அசைவுகள்.
    - சத்தங்கள்.
    - பாடல்.
    - பங்குபெறுதல்: முழுக்கதையையோ அல்லது கதையின் பகுதியையோ நடித்துக் காட்டுதல். போன்றவற்றால் இதை நடத்தலாம்.
- குரல்: குரல் தான் கதையை ஜீவனுள்ள தாக்குகிறது. ஒரு குழுவிலோ அல்லது வகுப்பிலோ சலிப்பை ஏற்படுத்தும் முதல் காரணம் ஒரே மாதிரியான ஏற்றத்தாழ்வுகள் அற்று இருக்கும் குரல். கீழே காண்பவற்டிற செயல் முறைப்படுத்துங்கள்.
    - பேசும் முறை
    - சுருதி
    - நிறுத்தம்: ஒரு கதையிலோ அல்லது கலந்துரையாடலிலோ இது மிகவும் பயனளிக்கக் கூடியது. அமைதியாயிருப்பதில் பயம் வேண்டாம். அமைதி / அமரிக்கை பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய அனுமதிக்கின்றது, அது கதையும் கதையின் கருத்தும் தலையிலிருந்து இருதயத்துக்கு பயணிக்க உதவுகின்றது.
    - வேகம்: கதையை புரிந்துக்கொண்டு அதோடு சுலபமாக செல்லத்தக்க வேகத்திலே பேசவேண்டும்.

இரண்டு இரண்டு பேராகவோ அல்லது சிறு குழுவாகவோ சேர்ந்து இயேசுவும் பேதுருவும் தண்ணீர்மேல் நடந்த கதையை சொல்லவேண்டும் ஆனால் இம்முறை சில கதைசொல்லும் திறன்களைக் கொண்டு சொல்ல வேண்டும். பைபிள் / வேதாகமம் சொல்லுகிறதை மட்டுமே மக்கள் சொல்லவேண்டும், அவர்களை தங்கள் சொந்த எண்ணங்களையோ, அர்த்தங்களையோ சேர்த்து சொல்லக் கூடாது.

---

இடைவேளைக்கு முன்பும் பின்பும் ஒருவரிடம் கதையை சொல்ல வேண்டும்



மனதிடம்



சோகம்



கோபம்



குழுப்பம்



நம்பிக்கை



தனிமை



குற்றவுணர்வு



களைப்பு



அன்பு



மகிழ்ச்சி



குரும்பு



ஆவல்



விரக்தி



பயம்



பொறாமை

# வீட்டு வேலை

அடுத்த பயிற்சிப் பருவத்திற்குள் செல்லும் முன்பு நடைபெற வேண்டிய ஒரு செயல்முறை. லூக்கா 15:1-7ல் உள்ள தொலைந்து போன ஆட்டுக்குட்டியின் கதையைப் படிக்கவும் அதை பல முறை விசேஷமாக வெவ்வேறு மொழிபெயர்ப்புகளில் வாசிக்க வேண்டும். கருத்தரங்குக்கு வருவதற்கு முன்பு முடிந்தால் வேறொருவருடன் அந்தக் கதையை சொல்லிப் பார்க்கவும்.

### தொலைந்துப் போன ஆட்டுக் குட்டியின் உவமையின் வேதாகமக் கதை கூறுதல் (லூக்கா 15:1-7)

ஆயக்காரர்களும், பாவிகளும் இயேசு சொல்வதைக் கேட்பதற்காக அவரை சுற்றி கூட்டமாக இருந்தனர். எனவே பரிசேயர்களும், மோசேயின் பிரமாணங்களை போதிக்கும் போதனையாளர்களும் முறுமுறுக்கத் தொடங்கினர்; அந்த மனிதன் பாவிகளுக்கு சிநேகிதனாக இருக்கின்றான். அவன் அவர்களுடன் உணவும் கூட உண்கின்றான்.

பின்னர் இயேசு அவர்களுக்கு இந்தக் கதையை கூறலானர்:

உங்களிலொருவனுக்கு நூறு ஆட்டுகளிலிருந்து, அவற்றில் ஒன்று தொலைந்து போகுமேயென்றால் என்ன செய்வீர்கள்? மற்ற தொண்ணூற்று ஒன்பது ஆடுகளையும் வயல் வெளியிலே விட்டுவிட்டு அந்த தொலைந்துப் போன ஆடு கிடைக்கும் வரை அதை தேடாமலிருப்பீர்களோ? அதைக் கண்டுபிடித்தீர்களேயென்றால், நீங்கள் மிகவும் களிகூர்ந்து அதைத் தூக்கி உங்கள் தோள்களின் மேல் சுமந்துக் கொண்டு வீட்டிற்கு வரமாட்டீர்களோ? பின்னர் உங்கள் நண்பர்களையும், அயலகத்தாரையும் அழைத்து, "நான் என்னுடைய தொலைந்துப்போன ஆட்டைக் கண்டுபிடித்துவிட்டேன், வாருங்கள் கொண்டாடுவோம்! என்று கூறுவீர்கள் என்று சொன்னார். அதேபோல் தான் மனந்திரும்ப தேவையில்லாத தொண்ணூற்று ஒன்பது நீதிமான்களை விட தேவனிடமாய் மனந்திரும்பும் ஒரு பாவியினிமித்தம் பரலோகத்திலே மிகுந்த மகிழ்ச்சி உண்டாயிருக்கும் என்று கூறினார்".

கதை கூறல்: இந்தக் கதையை சிறந்த முறையிலே எவ்வாறு நினைவில் வைத்துக்கொள்வது? இந்த கதையை அதிக உயிரோட்டத்துடன் மாற்றவும், சிறுவர்களை கதையினுள் ஈர்த்துச் சொல்லவும், எத்தகைய கதை சொல்லும் பயிற்சிகளை உபயோகிக்கக் கூடும்?

# பகுதி #4
# தியானம்: இயேசுவின் வழியிலே செய்தல் (மாற்கு 6:7-13)

பங்கெடுப்போரை வாழ்த்துங்கள், நேரமிருந்தால் முந்தின நாள் அவர்கள் எப்படி உணர்ந்தார்களென்பதைக் கூறும்படி கேட்கவும்: நாம் இந்த நாளை தொடங்கும்முன், நான் உங்களுக்கு மற்றுமொரு கதையை சொல்லப்போகின்றேன். நாம் அவருடைய நாமத்தினிமித்தம் ஊழியம் செய்யும்போது, இயேசு நம்மிடம் எதிர்ப்பாக்கும் சில காரியங்களைப் பார்ப்போம்.

தொடங்குதல்: (பங்காளரிடம் பகிர்ந்துக்கொள்ளவும்)

தேவன் உங்களை வல்லமையான முறையிலே உபயோகித்த சமயம் ஒன்றை பகிர்ந்துக்கொள்ளவும்.
அல்லது
நீங்கள் ஏதோவொன்றை செய்யவிரும்பியதையும் அதை செய்ய தேவையானவை என்று நினைத்ததை நீங்கள் கொண்டிராமலிருந்ததினாலே விரக்தியடைந்திருந்த சமயத்தையும் பகிர்ந்துக்கொள்ளவும்.

**அறிமுகம்:**

இயேசு நாடுமுழுவதும் போதித்துக் கொண்டும், சுகமாக்கிக்கொண்டும் இருந்தார். அவர் தம்முடைய சொந்த ஊராகிய நாசரேத்துக்கு திரும்பி வருகிறார். தேவனுடைய குமாரனாக இருந்தும் அந்த மக்கள் அவர் பேரிலே அற்ப விசுவாசமுள்ளவர்களாக இருந்ததைப் பார்த்தார். இதனால் அவரால் வெகு சில சுகமாக்குதலையே செய்ய இயன்றது. இங்கேயிருந்து தான் நாம் மாற்கு எழுதின புத்தகத்தின் வேதபாடத்தை தொடங்குகின்றோம்.

**கதை சொல்லுதல்:**

பின்பு இயேசு தம்முடைய பண்ணிரெண்டு சீஷர்களையும் ஒன்றாக அழைத்து, அவர்களை இரண்டு இரண்டு பேராக அனுப்பினார், அவர்கள் அசுத்த ஆவியை துரத்தவும், சத்துருவை சமாளிக்கவும் அவர்களுக்கு பெலனையும், அதிகாரத்தையும் கொடுத்தார். இயேசு அவர்களுக்கு கொடுத்த விதிமுறைகளாவது: உங்களுடன் ஒன்றையும் எடுத்துச் செல்ல வேண்டாம் – உணவு, உடை, பணம். பாதரட்சையை அணிந்துச் செல்லலாம், கையிலே தடியையும் ஒரு அங்கியையும் மட்டுமே எடுத்துச்செல்லலாம்.

“நீங்கள் எங்கெல்லாம் செல்கின்றீர்களோ” இயேசு சொன்னார், “அந்த பட்டணத்தை விட்டு போகிறவரையிலும் ஒரே வீட்டிலே தங்க வேண்டும். ஏதோவொரு இடம் அவர்களை பறக்கணித்தாலோ அல்லது வரவேற்றவில்லயென்றாலோ, அவர்களுக்கு எச்சரிக்கையாக, அவர்கள் கால்களிலிருக்கும் தூசியை உதறிவிட்டு செல்லவேண்டும்.”

எனவே சீஷர்கள் சென்று, அவர்கள் சந்தித்த அனைவரிடமும் தங்கள் பாவங்களினின்று அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று கூறினார். அவர்கள் தேவனிடமாய் திரும்பும்போது வாழ்க்கை அவர்களுக்கு வித்தியாசமானதாக இருக்கும். மேலும் அவர்கள் அநேக பிசாசுகளைத் துரத்தினர், அநேக சுகவீனர்மேல் ஒலிவ எண்ணெய் பூசினர், அவர்கள் சுகமடைந்தனர்.

**மீண்டும் சொல்:**

கயிற்றை உபயோகித்து "வ்ரூம்..." செயலை செய்யுங்கள், கயிறு ஒவ்வொருவரிடமாய் செல்லும்போது, நிறுத்து என்று சொல்லப்படும் போது, எவர் அந்த கயிற்றிலுள்ள முடிச்சைப் பிடித்துக் கொண்டிருக்கின்றாரோ அவர்தான் கதையின் அடுத்தப் பகுதியை சொல்லவேண்டும்.

**கண்டறியும் கேள்விகள்:**

- இந்த கதையிலே உங்களுக்கு பிடித்திருந்தது என்ன?
- இதற்கு முன் நீங்கள் கேட்டிராத புதுமை இந்த கதையிலே இருந்ததா?
- சீஷர்கள் தங்களுடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படாதது எது?
- அவர்கள் கொண்டிருந்தது என்ன?
- கதையிலே நடந்தவற்றிலே உங்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது எது?
- தேவனுடைய பணியை செய்ய நீங்கள் எதை சார்ந்திருக்கின்றீர்கள் / எதைப் பெற்றிருக்வேண்டுமென்று நினைக்கின்றீர்கள்?
- தேவன் நீங்கள் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாரென்று இக்கதை உங்களுக்கு எவ்விதம் விளக்குகிறது?

**பதில் கேள்விகள்:**

- இப்போது நீங்கள் இக்கதையைக் கேட்டிருப்பதால், நீங்கள் செய்யும் படி பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் சொல்லுவது என்ன?
- நீங்கள் உங்களையல்ல தேவனை சார்ந்திருக்க வேண்டுமென்று எங்கே எந்த விஷயத்தில் கேட்கின்றார்?

# பகுதி #5
# மீண்டும் கதையை சொல்லுதல்

சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதற்காகவோ அல்லது வேதாகமத்தின் துல்லியமான விபரங்களுக்காகவோ மக்கள் கதையை மீண்டுமாக சொல்லுதல் முக்கியமானது. அதை செய்யும் ஒரு வழியாவது, பங்கெடுப்போர் வேதாகமத்தை வைத்திருந்தால், அவர்கள் அதைத் திறந்து, வேத பகுதியிலிருந்து அந்த கதையை மீண்டுமாக வாசிக்க செய்யலாம். இதை செய்ய ஒருவர் கதையை வாசிக்கவேண்டும், அல்லது தலைவர் கேள்வி கேட்க அதற்கு மற்ற அனைவரும், வார்த்தையிலிருந்து விடையை கண்டுபிடிக்க வேண்டும், சிறுவர்களை கதைக்குள்ளாக கொண்டு செல்லலுவும், குழுவாக செய்யும் திறனையும் வளர்க்கவும் இது உதவும். இது அவர்கள் கதையை நினைவில் வைத்துக்கொள்ளவும் அதை பிறரிடம் சொல்லவும் அவர்களுக்கு உதவும்.

ஒவ்வொரு கலாச்சாரத்திலும் இருக்கும் உலகமனைத்திற்கும் பொதுவான சில காரியங்களை நினைவில் கொண்டிருப்பவர் யார்? (உடைமை, விளையாட்டுகள், இசை, கலைகள் மற்றும் கதைகள்). இதை நாம் நம் மீண்டும் கதைசொல்லும் நேரத்திலே உபயோகித்துக் கொள்ளலாம். விசேஷமாக சிறுவர்களுக்கு நீங்கள் செய்துக் கொண்டிருப்பதை அவர்களை கவனிக்க வைக்க விளையாட்டுகள் பேருதவியாக இருக்கும். சாதாரணமாக எங்கும் கிடைக்கக் கூடிய சில பொருட்களைக் கொண்டு நாம் சில எளிமையான விளையாட்டுகளை விளையாடப்போகின்றோம்.

இயேசுவும் பேதுருவும் தண்ணீர்மேல் நடக்கும் கதையை மீண்டுமாக கூற ஏதாவதொரு விளையாட்டை உபயோகிக்கவும். பின்னர் கீழே கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு விளையாட்டைக் கொடுக்கவும், இறுதியில் அதை செயல்படுத்த போதுமான கால அவகாசத்தைக் கொடுக்க வேண்டும்.

**விளையாட்டுகள்**

- கடற்கரை பந்து: அழியாமலிருக்கக் கூடிய மையினாலே ஒரு பந்திலே, எந்தவொரு வேதாகமக் கதைக்கான சில முக்கிய கேள்விகளை எழுதிக்கொள்ளலாம். அந்த பிள்ளை எங்கே அந்த பந்தை பிடிக்கின்றதோ அங்கேயுள்ள கேள்விக்கான பதிலை அது கொடுக்கவேண்டும். 29ம் பக்கத்திலுள்ள முக்கியமான கேள்விகளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- வட்ட வடிவிலே பந்தை எறிதல்: ஒரு பந்தையோ அல்லது ஏதோவொரு மென்மையான பொருளையோ ஒரு சிறிய குழுவிலே தூக்கி எறிய வேண்டும். பந்தை தூக்கியெறிபவர் வேதாகமக் கதையிலே என்ன நடந்தது என்பதைப் பற்றி சொல்லவேண்டும். ஒரு பலூனைக் கொண்டும் இதை விளையாடலாம்.
- கடிகாரம்: ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒரு குழு அந்தக் கதையை எவ்வளவாக சொல்ல இயலுகிறதென்பதை ஒரு கடிகாரத்தைக் கொண்டோ அல்லது எண்களை எண்ணச் செய்வதின் மூலமாக கண்டறியும்படி செய்யலாம்.
- உங்களை கட்டிக்கொள்ளுங்கள்: ஒரு கயிற்றின் ஒரு பகுதியிலே ஒரு முடிச்சை முடிக்க வேண்டும். அந்த கயிற்றை சிறுவர்களுடன் வட்டமாக சுற்றிக் கட்டிக்கொள்ளவும். சிறுவர்கள் அந்த கயிற்றைப் பிடித்துக் கொள்ளவேண்டும். உங்கள் கட்டளையின்படி சிறுவர்கள் அந்தக் கயிற்றை கடிகாரம் சுற்றும் திசையிலே சுற்றவேண்டும். நீங்கள் "நிறுத்து" என்று கூறும்போது யாரிடம் அந்த முடிச்சுக் காணப்படுகிறதோ அந்த பிள்ளை கேள்விக்கான பதிலைக் கூறவேண்டும் அல்லது கதையிலே அடுத்து நடந்ததென்ன என்பதைக் கூறவேண்டும்.
- கதை அட்டைகள்: தனித்தனி அட்டைகளிலோ அல்லது பேப்பரிலோ வேதாகமக் கதையில் பல பகுதிகளை எழுதி வைத்துக் கொள்ளவேண்டும். அதை பல்வேறு பிள்ளைகளிடம் கொடுக்கவும் பின்னர் அதை சரியான முறையிலே வரும்படி வரிசையாக நிற்கும்படி செய்ய வேண்டும். அதை செய்ய அவர்களுக்கு கால அவகாசம் கொடுக்கவேண்டும், அல்லது இரண்டு, மூன்று நகல்களை எடுத்து, வேறே குழுவிற்கும் கொடுத்து யார் அதை எவ்வளவு துரிதமாக செய்கின்றனர் என்பதை கண்டுபிடிக்கும்படி செய்ய வேண்டும்.
- இசை நாற்காலிகள்: ஒரு குழுவிலுள்ள நபர்களின் எண்ணிக்கைக்கு ஒன்று குறையை நாற்காலிகளை வட்டமாக போட்டக்கொள்ளவும். இசைக்கப்படுகையிலே, நபர்கள் வட்டமாக நாற்காலிகளை சுற்றி வரவேண்டும். இசை நிறுத்தப்படும்போது ஒவ்வொருவரும் அவர்களுக்கான நாற்காலியை கண்டுபிடிக்கவேண்டும். நாற்காலி கிடைக்காமல் நின்று கொண்டிருப்பவர் கதையின் அடுத்த பகுதியை சொல்லவேண்டும். கதை முழுவதும் சொல்லி முடியும்வரை இதை பின்பற்றவும்.
- தாயக்கட்டை விடையாட்டு: ஒவ்வொரு சிறு குழுவும் வட்டமாக அமர்ந்து கொள்ளவேண்டும். முதல் பிள்ளை தாயக்கட்டையை உருட்டிவிடவேண்டும். 2, 3, 4, 5 ஆகிய எண்கள் வரும் என்றால், அவர்களை கதையிலே நடந்த முதல் காரியத்தை சொல்லவேண்டும். ஒன்று வருமென்றால் வாய்ப்பு அவர்களை தாண்டி அடுத்த நபர் நடந்ததென்பதை பகிர்ந்துக் கொள்ளவேண்டும். 6 வருமேயென்றால் அது தலைகீழாக சென்று அடுத்த பக்கமாக உள்ளவர் கதையை சொல்ல வேண்டும். கதை சொல்லி முடியும் வரை பிள்ளைகள் பங்கெடுத்து உருட்டை விளையாட வேண்டும்.

**கலை**

- கிராஃபிட்டி வால்: ஒரு குழுவாக, பிள்ளைகள் கதையை வார்த்தைகளின் மூலமாகவோ, ஓவியங்கள் (படங்களின்) மூலமாகவோ சொல்லலாம்.
- தனிப்பட்ட படங்கள்: பிள்ளைகள் கதையிலே அவர்களுக்குப் பிடித்த பகுதியை படங்களின் மூலம் வரைந்தும், வண்ணங்கள் தீட்டியும் பகிர்ந்துக் கொள்ளலாம்.
- டி–சர்ட் வடிவம்: ஒரு கதையின் பெரும்பாலான பகுதியை விவரிக்கும் ஒரு டி–சர்டின் முன்பக்க படத்தை வடிவமைக்கலாம்.
- பபைப் க்ளீனர்ஸ் / விளையாடும் மாவு: இந்த கலைப் பொருட்களை அல்லது வேறு கலைப் பொருட்களை ஒரு கதையை உருவாக்கவோ அல்லது திரும்ப கூறவோ பயன் படுத்திக் கொள்ளலாம்.
- விளம்பர அட்டைகள்: சாலையோரத்திலே வைக்கப்படும் விளம்பர போர்டுகள் / அட்டைகளைப் பயன்படுத்தி ஒரு வேதாகமக் கதையையோ அல்லது அந்த கதையுடன் உங்களை எவ்வாறு இணைத்துக் கொள்கின்றீர்கள் என்பதைப் பற்றி வடிவமைக்கலாம்.
- பட அகராதி: கதையின் பல்வேறு பகுதிகள் கொடுக்கப்படுகின்றது, மற்றொருவர் அது என்னவென்று கண்டுபிடிக்கும் வரை ஒருவர் அதை வரைந்துக் கொண்டிருக்கவேண்டும்.

**நாடகம்**

- நடித்துக் காட்டு: குழுவிலுள்ள சிறுவர்களுக்கு கதையின் வெவ்வேறு பகுதிகளைக் கொடுக்கவும் அதை அவர்கள் பயிற்சித்து பின்னர் மற்ற குழுவினருக்கு அதை நடித்துக் காண்பிக்க வேண்டும்.
- சிறுவர் கதைப் பலகை: வெவ்வேறு ஃபளானல் அட்டையிலே ஒட்டும்படி செய்யப்பட்ட கதாப்பாத்திரங்களை பிள்ளைகளிடம் கொடுத்து அவர்கள் கதை சொல்லிக்கொண்டே அதை கதைப்பலகையிலே ஒட்ட வேண்டும்.
- அட்சரக் குறிப்புகளைக்கொண்டு சொல்லக் கண்டபிடிக்கும் விளையாட்டு: வார்த்தைகளை உபயோகிக்காமல் சிறுவர் பல்வேறு காட்சிகளை நடித்துக் காட்டுவார்கள், பார்வையாளர்கள் கதையின் எந்தப் பகுதி அது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.
- வேதாகமக் கதையை மீண்டுமாக வாசித்து மீண்டும் மீண்டுமாக வரும் வார்த்தைகளுக்கோ செயல்களுக்கோ பல்வேறு விதமான சத்தங்களையும், அசைவுகளை உபயோகப்படுத்த வைக்கலாம்.
- பொருட்கள் (அதாவது: ஸ்கார்ப், கயிறு): கதையை சொல்ல எத்தனைதரம் அந்த பொருட்களை உபயோகிக்கலாம் என்று பார்க்க வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் 3 வெவ்வேறான பொருட்களை கொடுத்து அதை கதை சொல்லும் போது உபயோகிக்கச் சொல்லலாம்.
- அசைவுகள்: கதையின் ஒவ்வொரு பகுதியையும் விளக்க பல்வேறு விதமான அசைவுகளை உபயோகிக்கலாம். ஒவ்வொரு பிள்ளைக்கும் அல்லது குழுவிற்கும் ஒரு அசைவைக் கொடுக்கலாம். அவர்கள் அதை அக்கதைக்கேற்ப வரிசையாக செயல்படுத்த வேண்டும்.
- மனிதப் படக் காட்சி: திரையாக உபயோகிக்க ஒரு பெரிய துணியை எடுத்துக்கொள்ள வேண்டும். சிறுவர் இருவர் அதை நீங்கள் சொல்வதற்கேற்ப அதை உயர்த்தியோ, தாழ்த்தியோ பிடிக்கலாம். கதாப்பாத்திரமாக இருக்க பலசிறுவர்களை தெரிந்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கதைப் பகுதிக்கும், திரை மேலே உயர்த்தப்படும்போது, சிறுவர்கள், அப்பகுதியிலே வரும கதைக்கேற்ப, ஒரு படம் அல்லது ஓவியம் போன்ற பாணியிலே நிற்கவேண்டும். அவர்கள் அவ்வாறே திரையை கீழே இறக்கும் வரை அசையாமல் நிற்க வேண்டும். கதையை சொல்ல சொல்ல காட்சிகள் மாறிக்கொண்டே இருக்கும்.
- பொம்மலாட்டங்கள்: சாக்ஸ் (கால் உறைகள்), பேப்பர் தட்டுகள், பேப்பர் கப்ஸ், குச்சிகள் போன்ற பொருட்களைக் கொண்டு எளிமையானப் பொம்மைகளைச் செய்து அதை உபயோகிக்கலாம்.

**இசை**

- இசை அமைத்தல்: கதையின் முக்கிய நிகழ்வை சிறுவர்களை இசையுடன் சொல்ல செய்யலாம்.
- ஏற்கணவே தெரிந்த இராகத்தில் புதிய பாடல் அமைத்தல்: ஒரு எளிமையான சிறுவர் பாடலை தெரிந்தெடுத்து, அதில் கதைக்கேற்ப புதிய வார்த்தைகளை மாற்றியமைத்துப் பாடலாம்.
- தாளம்: குழுவினர் சிறந்த தாளத்தை போடச்செய்து, தாளம் போட்டுக்கொண்டே கதையை சொல்லாம்.
- நடனம்: கதையை சொல்லும் விதத்திலே நடனமாக வேண்டும். இதற்கு ஒரு பின்னனி இசையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

**எழுதுதல்**

- கதைப் புத்தகங்கள்: கதைப்புத்தகமோ அல்லது காமிக்ஸ் வடிவத்திலிருக்கும் படங்களையும், வார்த்தைகளையும் கொண்டு கதையை மீண்டுமாக சொல்ல செய்யலாம்.
- தினசரி செய்தித்தாள்: சிறுவர் அமைதியாக உட்கார்ந்து கதையிலே இருந்தது என்ன என்றும், அது அவர்களில் எவ்வித தாக்கத்தை ஏற்படுத்தியதென்றும் எழுத ஒரு தருணத்தை அவர்களுக்களிக்க வேண்டும்.
- தலைசிறந்த பத்து: கதையின் தலைசிறந்த பத்து நிகழ்வுகளைத் தனிப்பட்ட முறையிலோ அல்லது குழுவாகவோ எழுத வைக்கலாம்.
- அடுத்தது என்ன?: கதையிலே கேள்விப்பட்டதைக் கொண்டு தேவன் அவர்களை என்ன செய்ய சொல்கின்றாரென்று ஒவ்வொரு பிள்ளையும் எழுதும்படி செய்யவும்.
- ஒப்பிடுதல்: கதையிலே சொல்லப்பட்ட கதாப்பாத்திரம் ஒன்றை ஒவ்வொரு குழந்தையும் தெரிந்துக்கொள்ளும்படி செய்யவும். வேதாகமக் கதாபாத்திரத்தினின்று அவர் எப்படி வேறுபடுகின்றனர் அல்லது எப்படி ஒத்துச்செல்கின்றனர் என்பதை ஒரு சார்ட் (அட்டையிலே) எழுதும்படி செய்யவும்.

# பகுதி #6

# தொலைந்து போன ஆடு

தொலைந்து போன ஆட்டின் கதையை ஒவ்வொருவரும் எவ்விதம் வாசித்தனர்? அந்த கதையை வேறொருவருடன் உங்களால் சொல்ல இயன்றதா? அப்படியென்றால் என்ன நடந்ததென்பதை சொல்ல இயலுமா?

இந்தப் பகுதியிலே, தொலைந்துபோன ஆட்டின் கதையை சொல்ல மீண்டுமாக ஆயத்தப்படவும், அதை சொல்லும் செயல்முறைகளை செய்யப்போகின்றோம். நாம் 3-4 பேர் கொண்ட குழுவாக பிரிந்துச் செல்வோம்.

உங்கள் குழுவிலே உங்களுக்காகவும் நீங்கள் கதை சொல்லப்போகும் குழந்தைகளுக்காகவும் சிறிது நேரம் (5 நிமிடங்கள்) ஜெபிக்கவும்.

உங்கள் குழுவிலுள்ள 2 பேர், வேதாகமத்திலிருந்து அந்த கதையை சத்தமாக வாசிக்க வேண்டும் (5 நிமிடங்கள்).

உங்கள் குழுவிலே எத்தகைய கேள்விகள் அல்லது செயல்முறைகள் பாடங்களைத் தொடங்க ஏதுவாக இருக்கும் என்பதை அனைவரும் சொல்லக்கேட்டு அதை குறித்து வைத்துக்கொள்ளவும். முழு வகுப்புடனும் நீங்கள் பகிர்ந்துக்கொள்ளக் கூடிய அந்த ஒரு கருத்து என்ன? (10 நிமிடங்கள்).

கதையைச் சொல்லும் முன்பு, பிள்ளைகள் அறிந்துக்கொள்ள வேண்டிய முக்கியமான அறிமுகங்கள் என்ன? (10 நிமிடங்கள்).

ஒவ்வொருவரும் அவர்களால் இயன்ற சிறந்த முறையிலே கதையை சொல்ல வேண்டும். (10 நிமிடங்கள்).

இந்தக் கதையை மீண்டுமாக சொல்வதற்கு எத்தகைய திரும்ப சொல்லும் செயல்முறை சிறப்பாக இருக்கக் கூடும்? ஒரு குழுவாக நீங்கள் செய்யத்தக்க ஒன்றை தெரிந்துக்கொள்ளவும். (10 நிமிடங்கள்).

# பகுதி #7
# கண்டறியும் பதில் கேள்விகள்

கதை சொல்லும்முறையிலே கேள்விகளைக் கேட்பதும் அதைத் தொடர்ந்து வரும் கலந்துரையாடல்களும் மிகவும் முக்கியமானதாகும்! விபரங்களை அறிந்துக்கொள்வது மட்டுமே மிக முக்கியமானதன்று. ஒரு தலைவர் கதையின் சில உண்மைகளை நினைவு படுத்தி அது அவர்களை எவ்வாறு உணர வைக்கின்றதென்பதை பகிர்ந்துக்கொள்ள செய்யவேண்டும். இது பரிசுத்த ஆவியானவர் தம் கிரியைகளை செய்து அவர்கள் இயேசுவைப் போன்று இன்னும் அதிகமாக மாற உதவுகின்றது. இயேசுவும் கூட மக்களை ஆழமான விளங்கிக்கொள்ளுதலுக்குள்ளும், மன மாற்றத்திற்குள் நடத்த, கேள்விகளைக் கேட்டார். கலந்துரையாடல்களை ஊக்குவிப்பது, வேதாகமத்திலுள்ள புதையல்களை பிள்ளைகள் கண்டறியவும், வேதத்தை அவர்கள் இருதயத்திற்குள்ளாக செலுத்தவும் உதவுகின்றது.

நீங்கள் கேள்விகளைக் கேட்கும்போது, தேவனுடைய சத்தியங்களை மக்கள் தாங்களாகவே கண்டறியத் தொடங்குவார்கள்; அது சும்மா அவர்களிடம் சொல்லபட்டதன்று. அது அவர்களின் இருதயங்களுக்குள்ளும், வாழ்விலும் ஆழமாக பதிகின்றது. நீங்கள் என்ன அறிந்திருக்கின்றீர்கள் என்பதைப் பற்றி இல்லை – அவர்கள் அவர்களாகவே தேவனுடைய சத்தியத்தை கண்டறிந்துக்கொள்ள செய்வதாகும்! கேள்விகளை கண்டறியுங்கள். பின்னர் அதை மையமாகக் கொண்டு கலந்துரையாடலை ஏற்படுத்துங்கள்.

- தலை ( நிதர்சனவிகள் ) கதையிலே “என்ன” நடந்ததென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள இந்த கேள்விகள் நமக்குதவும்.
- இருதயம் (மனம்) (உணர்வுகள்) இந்தக் கதை எத்தனை விதமான உணர்வுகளை அவர்களிடம் ஏற்படுத்தியது என்பதை உணர கால அவகாசம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். “அதனால் என்ன” அல்லது “ஏன்” என்பதற்கு பதில் அளிக்க வேண்டும். மக்களின் பிரதிக்கிரியைக்குள் எப்போது ஆழமாக செல்ல வேண்டுமென்பதற்கு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு உணர்வுள்ளவர்களாயிருங்கள். முதல் பிரதிக்கிரியையிலே திருப்தியாகிவிடாதீர்.

இந்தக் கலந்துரையாடல் பின்னர் ஒவ்வொருவரும் அதை தனிப்பட்ட முறையிலே எடுத்துக்கொள்ள இரண்டு கேள்விகளுடன் முடிவுபெற வேண்டும். இங்கே பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவருடனும் பேசுகின்றார், வெளிபடுத்துகின்றார். அது ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாக இருக்கும். பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறதாலே இது நல்லதாக இருக்கின்றது.

சில சமயங்களிலே வேதாகமக் கதை சொல்லும் முறையைக் கொண்டு ஒரு குறிப்பட்ட தலைப்பை அல்லது காரியத்தைப் பற்றி நீங்கள் பேசலாம். இங்கே அதற்கேற்றார் போல சில கேளவிகளைக் கேட்கலாம், ஆனால் இத்தகைய பதில்தான் வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது. திருப்பிப்பார்த்தல் மற்றும் தொடருதல் மிகவும் முக்கியமானதாகும். தேவன் சொல்லியதற்கு ஒவ்வொருவரும் எந்த அளவிற்கு கீழ்ப்படிகின்றனர் என்பதை கண்காணிக்க வேண்டும். இத்தகைய கேள்விகள் இவ்வாறாக இருக்கும்:

- கைகள் (வலியுறுத்துவது) – “இப்போது என்ன”

இதற்கான மாதிரிக் கேள்விகளெல்லாம் 29-30 ஆம் பக்கங்களிலே காணப்படுகின்றது. கீழ்காணும் கேள்விகளை உங்கள் பாடத்திற்கேற்ப நீங்கள் உபயோகிக்கலாம். இதே மாதிரி கேள்விகளை அவர்கள் சோதிக்க உபயோகிக்க வேண்டுமென்றில்லை ஆனால் ஒவ்வொருவரின் இருதயத்திலும் வாழ்விலும் பரிசுத்த ஆவியானவர் செய்ய விரும்புகிறதென்ன என்பதைப் பற்றி கண்டறிந்துக்கொள்ள உபயோகிக்கலாம்.

**கேட்கத்தக்க சில முக்கிய கேள்விகள்:**

- கதை சொல்லப்பட்டபோது எதைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தீர்கள்? (தலை / இருதயம்).
- கதையின் எந்தப் பகுதி உங்களுக்கு பிடித்தது? எது பிடித்தது? (தலை)
- விளங்கிக்கொள்ள கடினமானதாக ஏதாவது இருந்ததா? (தலை)
- மக்கள் எதை தேர்வு செய்தனர்? வேறு என்ன அவர்களால் செய்திருக்க இயலும்? அவர்கள் எடுத்த தேர்வுகளால் நடந்ததென்ன? (தலை)
- தேவனைப் பற்றி நான் கற்றுக்கொண்டதாவது... அவரை நேசிப்பதிலும், அவருக்காக வாழ்வதிலும் சேவிப்பதிலும் எத்தகைய மாற்றத்தை இது ஏற்படுத்தும்? (இருதயம்)
- தேவனை நீங்கள் இவ்விதமாக அறிந்துக்கொள்ள விரும்புகின்றீர்களா? தேவன் உங்களுக்கு உதவும் படியாக உங்கள் வாழ்க்கையிலே இப்போது ஏதாவது நடந்துக் கொண்டிருக்கின்றதா? (இருதயம்)
- இன்றைய கதையிலிருந்து தேவன் ( பரிசுத்த ஆவியானவர் ) நீங்கள் என்ன செய்ய வேண்டாமென்று விரும்புகின்றார். (தலை)

**வலியுறுத்தப்பட வேண்டிய காரியங்கள்:**

- சில தொடக்க அறிவு சார்ந்த கேள்விகளைத் தவிர ஒரு சரியான பதிலை நீங்கள் எதிர்பார்க்கவில்லை. ஒரு கேள்வியைக் கேட்டவுடன், அநேகர் அதற்கு பதிலளிக்க அனுமதிக்கவும். ஒவ்வொருவரின் பதில் மூலமாகவும், கற்றுக்கொள்ளுதலும் வெளிப்பாடுகளும் ஏற்பட விரும்புகின்றோம்.
- சில பதில்களுக்கு, இன்னும் சில கேள்விகள் கேட்டு அதை பின் தொடர வேண்டுமென்று. நீங்கள் விரும்புவீர்கள். இந்த தொடக்க பதில் மூலம் பரிசுத்த ஆவியானவர் எதை வெளிப்படுத்த விரும்புகிறாரென்று பாருங்கள் "அவ்வாறாக உணர அல்லது யோசிக்க செய்தது எது?" அல்லது "அது ஏன் உங்களுக்கு முக்கியமானதாக இருக்கிறது?" போன்ற கேள்விகளை கேட்கலாம். மக்கள் பகிர்ந்துக்கொள்ள ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை கொண்டிருக்கும்படி கவனமாக இருங்கள்.
- ஒரு தலைவராக உங்களிடம் கேள்வி கேட்கப்படும்போது, கலந்துரையாடும்படி அதை குழுவிடம் திறந்துக் கொடுங்கள். பொதுவாக தலைவர் முதல் பிரதிக்கிரியை செய்யத் தொடங்கும்போது கலந்துரையாடல் நிறைவு பெறுகிறது. குழுவினிடமாய் அதை திருப்பிவிடுதல், அவர்களை யோசிக்க வைக்கிறது இன்னும் சில ஆழமான கருத்துக்களை கொடுக்கின்றது.
- உங்களிடம் ஒரு கேள்விகேட்கப்பட அதற்கு உங்களுக்கோ, குழுவிற்கோ பதில் இல்லாமலிருக்கும்போது, அது நல்ல ஒரு கேள்வியென்றும் அதற்கு நீங்கள் வீட்டிற்குச் சென்று பதிலை கண்டறிய வேண்டுமென்று பிள்ளைகளிடம் கூறுங்கள்.

பங்கெடுப்பாளர்கள் 3-4 பேர் கொண்ட தங்கள் குழுவிற்கு செல்ல சொல்லுங்கள். ஒருவர் இயேசுவின் கதையையும், பேதுரு தண்ணீர்மேல் நடப்பதுபற்றியும் சொல்ல சொல்லுங்கள். ஒரு குழுவாக கீழ்காணும் கேள்விகளைக் கேளுங்கள். கேட்க பயிற்சி எடுங்கள்.

- 3 கேள்விகள்
- 5 உணர்வு கேள்விகள்
- 2 கை சைகை / பதிற் கேள்விகள்

இப்போது எல்லா குழுக்களும் இணைந்து கலந்துரையாடும் நேரமாகும். ஒரு குழுவிலிருந்து தலைவராக இருக்க வேண்டும். மேலே கொடுக்கப்பட்ட கேள்விகளைக் கொண்டோ அதனால் ஏற்பட்ட பிற கேள்விகளைக் கொண்டோ கலந்துரையாடலை தலைவர் தொடங்க வேண்டும்.

# கண்டறியும் / பதில் கேள்விகள்

## கண்டறியும் கேள்விகள் – தலை (நிதர்சனங்கள் / உண்மைகள்)

- கதையின் பொருளை விளங்கிக் கொள்ளுவதே என்னுடைய இலக்காகும்.
- கதை சொல்வது என்ன? கதையிலே நடைபெற்றது என்ன?
- நான் தேவனை அவருடைய வார்த்தையின் மூலமாய் அறிந்துக்கொள்ள விரும்புகின்றேன்.

a. கதை சொல்லப்பட்ட போது நீங்கள் கற்பனை செய்து பார்த்துக்கொண்டிருந்தது என்ன? அது உங்களை எவ்விதம் உணர வைத்தது?

b. அங்கே இருப்பதைப் போன்று உங்களால் கற்பனை செய்துப் பார்க்க இயன்றதா? கதை சொல்லப்பட்டபோது நீங்கள் கேட்டு / பார்த்து / முகர்ந்தது என்ன?

c. கதையிலே உங்களை கவர்ந்தது என்ன?

d. கதையிலே தேவன் / இயேசு அவர்களுக்கு போதித்துக் கொண்டிருந்தது என்ன?

e. முன்பு சொல்லப்பட்ட கதைகளிலே இவ்வாறாக தேவன் செய்ததை எங்கே பார்த்தீர்கள்?

f. முன்பு சொல்லப்பட்ட கதையை நினைவுறுத்தும்படி இந்த கதையிலே நீங்கள் ஏதாவது கேட்டதுண்டா? எவ்வித தொடர்பை நீங்கள் ஏற்படுத்தினீர்கள்?

g. பிற கதைகளில் எவை இவற்றைப்பற்றி பேசுகிறது? ______________________

h. விளங்கிக்கொள்ள கடினமாக ஏதாவது இருந்ததா?

i. மக்களுடன் தேவன் / இயேசு கொண்டிருக்கும் தொடர்பை இக்கதை எங்கணம் விளக்ககிறது?

j. இந்தக் கதையிலே தேவனுக்கும் / இயேசுவுக்கும் _______________ ஏற்பட்ட உறவைப் பற்றி நாம் கற்றுக்கொள்வது என்ன?

k. தேவன் / இயேசு இக்கதையிலே மக்களுக்கு எவ்விதத்தில் பிரதிக்கிரியை செய்கின்றார்? இது நமக்கு காட்டுவது என்ன?

l. தேவன் / இயேசு ________________________ எவ்விதமாக பிரதிக்கிரியைச் செய்தார்?

m. _____________________ மக்கள் எவ்விதம் பிரதிக்கிரியைச் செய்தனர்?

n. தேவன் / இயேசு எப்படி ______________________?

o. இந்த நிகழ்வின் மூலம் தேவன் / இயேசு அவர்களுக்கு காண்பித்ததென்ன?

p. இன்று நீங்கள் கற்றுக் கொண்டது...

   - தேவன்?
   - இயேசு?
   - இந்தக் கதை?
   - இயேசுவை பின்பற்றுவதென்பதாவது?
   - உங்களைப் பற்றி?

q. தேவன் / இயேசு எப்படிபட்டவர் என்பதைப் பற்றி கற்றுக்கொண்டது? மக்கள் எதை தெரிந்து கொண்டார்கள்?. அவர்கள் வேறு என்ன செய்திருக்க முடிம்? அதை தெரிந்து கொண்டதால் நடைபெற்றது என்ன?

r. மக்கள் எதை தெரிந்து கொண்டார்கள்?. அவர்கள் வேறு என்ன செய்திருக்க முடிம்? அதை தெரிந்து கொண்டதால் நடைபெற்றது என்ன?

s. கதையிலே ஒருவரின் நம்பிக்கைகள், நடத்தைகள் அல்லது மனப்பான்மையில் ஏற்படும் மாற்றங்கள் எவை?

t. கதையிலே தேவன் / இயேசுவைப்பற்றி நீங்கள் அறிந்துக்கொண்டது என்ன?

u. தேவன் / இயேசுவை பின்பற்றுவதால் எதை இழக்க நேரிடும்?

v. கதையிலே வித்தியாசமாகவோ அல்லது ஒரே மாதிரியாகவோ இருந்த கதாப்பாத்திரங்கள் எவை?

w. நம் சூழ்நிலை இவற்றுள் எவைப்போன்று உள்ளது?

## கண்டறியும் கேள்விகள் – மனம் (உணர்வுகள்):

- கதை என்னுடைய இருதயத்திற்குள் ஊடுருவும் வகையிலே நான் என்னை உணர்வு ரீதியாகவும், அவீக்குரிய ரீதியாகவும் இணைத்துக் கொள்வதே என்னுடைய இலக்காகும்.
- இந்த கதை ஏன் முக்கியமானது? இது எனக்கு ஏன் முக்கியமானது?
- நான் தேவனை அவருடைய வார்த்தையின் மூலமாக நேசிக்க விரும்புகின்றேன்.

a. இந்த கதையிலே உங்களுக்கு பிடித்தது என்ன? பிடிக்காதது என்ன?
b. இந்த கதையிலே உங்களை கவர்ந்தது எது?
c. இன்றைய கதையின் மிக முக்கியமானது எது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
d. இந்த கதையை கேட்கையிலே எவ்விதமாய் உணர்ந்தீர்கள்? ______________________
e. கதையை கேட்டுக்கொண்டிருக்கையிலே எதை கற்பனை செய்து பார்த்தீர்கள்?
f. கதை சொல்லப்பட்டபோது எதைப்பற்றி யோசித்தீர்கள்?
   - எத்தகைய உணர்வுகளை நீங்கள் பெற்றுக் கொண்டதாக உணர்கின்றீர்கள்?
   - எத்தகைய உணர்வுகள் தூண்டப்பட்டது?
   - அது எப்படி இருந்ததாக நினைக்கின்றீர்கள்?

g. இந்த கதையிலே______________________ன் இருதயத்திலும், எண்ணத்திலும் நடைபெற்றது என்ன என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
h. இன்றைய கதையிலே உங்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கிய காரியம் என்ன?
i. இன்றைய கதையிலே உங்களை நீங்கள் எந்த கதாபாத்திரத்துடன் இணைத்துக் கொள்கின்றீர்கள்.
j. தேவன் / இயேசுவுக்கு மிகவும் முக்கியமானது எது என்று நீங்கள் உணர்கின்றீர்கள்? எந்த கதாப்பாத்திரத்திற்கு?
k. எந்த முறையிலே நாமும்_________________ போன்று இருக்கின்றோம்? எந்த வகையிலே வேறுபட்டிருக்கின்றோம்?
l. இந்த கதையைக் கேட்ட பின்னர், உங்களை நீங்கள் பார்க்கும்விதம் எவ்விதம் மாறலாம்?
m. தேவன் உங்களை எப்போதாவது உபயோகித்திருக்கின்றாரா?
n. ...... என்ன நினைக்கின்றீர்கள்?
o. வேதாகமத்திலே தேவன் இந்த கதையை ஏன் வைத்தார் என்று நினைக்கின்றீர்கள்?
p. தேவன் / இயேசுவைப்பற்றி இப்போது என்ன நினைக்கின்றீர்கள்?
q. இதற்கு முன்பு உணர்ந்திராத ஒன்றை இன்று உணர்ந்திருக்கின்றீர்கள், அது என்ன?
r. இன்று நீங்கள் கேள்விப்பட்ட சுவாரஸ்யமான காரியம் எது?
s. இந்த கதை எவ்விதம் உங்களை உற்சாகப்படுத்துகிறது, உங்களுக்கு சவாலாக இருக்கின்றது?

## பதில் கேள்விகள் – கைகள் (சைகைகள்)

- இந்த கதையிலே நான் கற்றுக்கொண்டதை என் வாழ்விலே அப்பியாசப் படுத்த பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலை தேடுவதே என்னுடைய இலக்காக இருக்கிறது. இந்த கதையை நான் எவ்விதம் என் வாழ்க்கையிலே பொருத்திக்கொள்ளக் கூடும்?
- இந்த கதையிலே நான் கற்றுக்கொண்டதைக் கொண்டு நான் என் வாழ்க்கையிலே குறிப்பாக செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புவது என்ன?
- அவருடைய வார்த்தையிலே நான் கற்றுக்கொண்டு கீழ்ப்படிவதின் மூலம் நான் தேவனை சேவிக்க விரும்புகின்றேன்.

a. உங்கள் வாழ்க்கையிலே இதை மாற்ற வேண்டும் என்று உங்களை நினைக்க வைக்கும்படி நீங்கள் இன்று கேட்ட காரியம் என்ன?
b. இன்று நீங்கள் கற்றுக்கொண்டதிலிருந்து, தேவன் / இயேசு / பரிசுத்த ஆவியானவர் நீங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லுவது என்ன?
c. தேவன் / இயேசு / பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் சொல்வதாக நீங்கள் உண்ர்வது எது?
d. இன்றைய கதையின் நிமித்தமாக நீங்கள் வித்தியாசமாக செய்ய வேண்டியது எது? இதனால் அவரை நேசிப்பதிலும், அவரை சேவிப்பதிலும் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும்?
e. இந்த கதையிலிருந்து, இயேசுவைப் பின்பற்றுவதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? எப்படி அதை இவ்வாரம் அப்பியாசப்படுத்தப் போகின்றீர்கள்?
f. தேவன் / இயேசுவுக்கு இன்று நாம் எவ்விதம் பிரதிக்கிரியை செய்ய வேண்டும்?
g. இக்கதையைக் கேட்டபின்னர் வித்தியாசமாக எப்படி வாழபோகின்றீர்கள்?
h. தேவனை இவ்விதமாய் அறிந்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றீர்களா? தேவன் / இயேசு / பரிசத்த ஆவியானவர் உங்களுக்கு உதவ வேண்டுமென்பது போன்ற ஏதோவொரு சூழ்நிலை இப்போது உள்ளத ா?
i. இந்த கதையை இவ்வாரம் எங்கண்ம் பகிர்ந்துக்கொள்ளக் கூடும்?
j. அவருடைய கதையிலே நீங்கள் எந்த வகையிலே பங்கெடுத்துக்கொள்ள விரும்புகிறார் என்பதாக நினைக்கின்றீர்கள்?

**கதையிலுள்ள மக்களை நோக்குக:**

கதைக்கு சம்பந்தமேயில்லாத வேறு காரியங்களுக்கோ அல்லது தலைப்புக்கோ பிள்ளைகள் செல்லும்போது நடப்பது என்ன? அவர்களின் பதில்களுக்காக அவர்களை கதைக்குள்ளே கொண்டுவாருங்கள். அதைப் பற்றி கதை என்ன சொல்கின்றது? நாம் பின்னிட்டுத் திரும்பிப் பார்ப்போமாக.

- அளவுகோள்: சிலர் கவனம் சிதறி பல்வேற காரியங்களுக்குள்ளே சென்றுவிடுவார். அவ்வாறு நடக்கையிலே சில அறிவுரைகள்:
    - இன்றைய கதையிலே அதை எங்கே பார்க்கின்றீர்கள்? அதைப் பற்றிதான் நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றோம்.
    - நீங்கள் கூறுவதைப் பற்றி பின்னர் பார்க்கலாமே.

- இறையியல்: மக்கள் கடவுளைப் பற்றி பதிலளிக்க கடினமான கேள்விகளையும் எண்ணங்களையும் கொண்டிருக்கின்றனர். இந்த கதையிலே எதைக் காண்கின்றீர்கள்? ஒரு பெரிய பிரச்சனைக்கானத் தீர்வையோ கடவுளைப் பற்றிய கேள்விக்கோ அப்போது பதிலளிப்பது சிறந்ததுதானா என்பதை ஒரு தலைவராக நீங்கள் தீர்மானிக்க வேண்டியிருக்கும்.

- கேள்விகள்: ஒவ்வொருவரும் கேள்விக்கான பதில்களை அளிக்க கால அவகாசத்தைக் கொடுக்கவேண்டும். அதன்பிறகே அடுத்த கேள்விக்குள் செல்லவேண்டும். நேரம் இருக்கமேயென்றால் இதைப் பற்றி வேறு கேள்விகளையும் எடுத்துக்கொள்ளலாம். அமைதியாக இருத்தலும் நல்லதே. அது மக்கள் அமைதியாக இருக்கவும் தேவன் அவர்களுக்குள் கிரியை செய்வதை உணர்ந்துக் கொள்ளவும் அவர்களுக்குதவும்.

# பகுதி #8
# இறுதி செயல்

பங்கெடுப்போர் தங்கள் சிறு குழுவிற்கு செல்ல வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும், கீழேயுள்ள கதைகளில் ஒன்றைக் கொடுக்கவும். 12 க்கும் மேல் குழுக்கள் இருந்தால் ஒரே கதையை பல குழுக்களுக்குக் கொடுக்கலாம்.

அடுத்தப் பக்கத்திலே உள்ள பாடத் திட்டத்தைக் கொண்டு, குறிப்பிட்ட நேரத்திற்குள் முழுப்பாடத்தையும் திட்டமிட ஒவ்வொரு குழுவிற்கும் நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

- திமிர்வாதக்காரனை சுகமாக்குதல்: லூக்கா 5:17-26
- நல்ல சமாரியன்: லூக்கா 10:25-37
- 5000 பேரை போஷித்தல்: யோவான் 6:1-14
- பத்து குஷ்டரோகிகள் சுகமடைதல்: லூக்கா 17:11-19
- விடாப்பிடியாய் இருந்த விதவை: லூக்கா 18:1-8
- பரிசேயன், ஆயக்காரனின் ஜெபம்: லூக்கா 18:9-14
- குருடரை சுகமாக்குதல்: லூக்கா 18:35-42
- சகேயு: லூக்கா 19:1-10
- பேதுரு முடவனை சுகமாக்குதல்: அப்போஸ்தலர் 3:1-10
- எலிசாவும், விதவையின் எண்ணெய் குடங்களும்: 2 இராஜாக்கள் 4:1-7
- சாமுவேல் தேவனுடைய சத்தத்தை கேட்பது: 1 சாமுவேல் 3:1-14
- தாவீது இராஜவாக அபிஷேகம் பண்ணப்படுதல்: 1 சாமுவேல் 16:1-13

ஒவ்வொரு குழுவிலுள்ளவர்களும் பாடத்தை எவ்விதம் கற்றுக்கொடுக்கப் போகின்றாரென்ற கருத்துக்களை பகிர்ந்துக் கொள்ள செய்து, அதைக் கொண்டு ஒரு பாடத்திட்டத்தை உருவாக்கலாம். ஒன்றிக்கும் மேற்பட்ட குழுவிற்கு ஒரே கதை கொடுக்கப்பட்டிருக்குமேயென்றால் அவர்கள் இணைந்து கலந்தாலோசித்து பாடம் கற்றுக் கொடுக்க பயிற்சி எடுக்கலாம். மீதமிருக்கும் நேரத்திலே எத்தனை பாடங்களை அறிமுகப்படுத்த முடியுமோ அத்தனையும் அறிமுகப்படுத்தலாம்.

அறிமுகப்படுத்துவதற்காக, ஒவ்வொரு குழுவும், ஒவ்வொரு பகுதிக்கும் வெவ்வேறு நபர்கள் செய்யவேண்டும். நேரத்தைப் பொருத்து, தொடக்கத்தையும் கேள்விகளையும் சொல்லவேண்டும். அதை விரிவாக பார்க்க முடியாது. அறிமுகம், கதை சொல்லுதல், மீண்டுமாக சொல்லுதல் ஆகியவை முழுவகுப்பினாலோ அல்லது மற்றொரு சிறிய குழுவினாலோ செய்யப்பட வேண்டும்.

அறிமுகத்திற்குப்பின், அறிமுகப்படுத்திய குழுவிற்கு அவர்கள் செய்ததைப் பற்றிய கருத்தைத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் தங்கள் வேலைகளிலே எவ்விதத்திலே ஆக்கப்பூர்வமாக இருந்தனர் என்பதைப் பார்க்க வேண்டும். நன்றாக செய்திருக்கலாம் என்பது போல தோன்றும் ஒரு காரியத்தைப் பற்றி கூறலாம். குறிப்பாக வேதாகமத்திற்கேற்ற விதமாக இல்லாமல் கொஞ்சம் அதிகமாக, வித்தியாசமாக கூறப்பட்ட தருணங்களைப் பற்றி சொல்லலாம்.

# பாடத்திட்ட அட்டவணை

**தொடக்கம்:**

- பிள்ளைகள் தங்கள் தனிப்பட்ட கதையைப் பகிர்ந்துக் கொள்ளும்படி ஒரு கேள்வியையோ, செயல் முறையையோ தெரிந்துக்கொள்ளலாம்.
- அந்த பிள்ளை கொண்டிருந்த உணர்வை அந்த பதில் தூண்டிவிடுமா?
- 'ஆம்' அல்லது 'இல்லை' இதற்குமேல் விளக்கமளிக்குமாறு உள்ள ஒரு கேள்வியைக் கேள்.

**அறிமுகம்:**

- விளக்கமளிக்கப்பட வேண்டிய வார்த்தைகள் உண்டா?
- பூகோளத்தில் இருக்குமிடம் அறிந்துக்கொள்வது முக்கியமானதா?
- கதைக்கு முன் நடைபெற்ற அறிந்துக்கொள்ளவேண்டிய சம்பவங்கள் ஏதாவது உண்டா?
- முக்கியமாக விளக்கப்பட வேண்டிய கலாச்சார வேறுபாடுகள் ஏதாவது உண்டா?
- ஏற்கனவே சொல்லப்பட்ட கதைகளிலே மீண்டும் பார்த்தால் நல்லது என்று கூறக்கூடிய வகையிலே ஏதாவது இருக்கிறதா?

**கதையை செல்லு:**

- கதையிலே சிறுவர்களை உள்ளடக்க இயலுமா?
- கதையை அதிக ஈடுபாட்டுடனும், கலந்துரையாடலாகவும் மாற்றத்தக்கதான காரியங்கள் ஏதாவது இருக்கிறதா?
- குழுவினருக்கு காண்பிக்கத்தக்கதான பொருள் ஏதாவது இருக்கிறதா?
- பெயர் பட்டியல், இடப்பட்டியல் போன்று வடிவமைக்கப்பட வேண்டிய பகுதிகள் கதையிலே உண்டா?
- பிள்ளைகள் கற்று பிறருக்கு சொல்லக் கூடிய வகையிலே கதையின் அளவு அமைந்திருக்கின்றதா?
- கதையிலே கதாப்பாத்திரத்தின் அனுபவத்திலிருந்து சொல்லக்கூடிய வகையிலே ஏதாவது கதாப்பாதிரம் இருக்கின்றதா?

**திரும்பச் சொல்:**

- என் மாணவர்கள் எதை அதிகமாக விரும்பி செய்கின்றனர்?
- நான் சமீபத்திலே உபயோகிக்காத ஆனால் பிள்ளைகளுக்கு உதவியாக இருக்கும் செயல்கள் ஏதாவது இருக்கின்றதா?
- எல்லா பிள்ளைகளும் பங்கெடுத்துக் கொள்ளத்தக்க போதுமான பொருட்கள் இருக்கின்றதா?
- வேதாகமக் கதைகளை பிள்ளைகள் திரும்பக் கூறும்போது வேதத்திற்கேற்க முறையிலே துல்லியமாக சொல்கின்றனரா?

**கண்டறியும் கேள்விகள்:**

- பரிசுத்த ஆவியானவர் இந்த கலந்துரையாடலை எங்கணம் நடத்த போகிறார் என்பதை அறிந்துக்கொள்ளும்படி நான் ஜெபித்தேனா?
- அறிவுப் பூர்வமாக மட்டுமல்லாது உணர்வுப் பூர்வமாகவும் உள்ள கேள்விகளை நான் கொண்டிருக்கின்றேனா?
- பிள்ளைகளின் ஸ்தானத்தோடு ஒப்பிடக் கூடிய கதையையின் பகுதி எது? பரிசுத்த ஆவியானவர் என்னை அவ்விதமாக நடத்துவாரென்றால் கலந்துரையாடலை அவ்வாறு நடத்தி செல்லவேண்டிய கேள்விகள் என்னிடம் உள்ளதா?

**பதில் கேள்விகள்:**

- பாடத்தை நான் எவ்விதம் நிறைவு செய்வேன் – எத்தகைய பதில் கேள்வி சிறந்ததாக இருக்கும்?

# பகுதி #9
# அர்ப்பணமும் ஆசீர்வாதமும்

- பங்கெடுப்போர் மதிப்பீடுதலை முடிக்கவேண்டும்.
- ஒவ்வொருவருக்கும் சான்றிதலை வழக்கவேண்டும்.
- ஒரு குழுபடம் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- ஆசீர்வாத ஜெபம் செய்யுங்கள்.
- ஆசீர்வாதப் பாடல் ஏதாவது இருந்தால் அதை கற்றுக்கொடுங்கள், பாடுங்கள்.

# இணைப்புகள்


| | பக்கங்கள் |
|---|---|
| • உலகெங்கிலுமுள்ள சிறுவர்கள் | 36 |
| • வழிமுறைகள் | 37-38 |
| • அறிவாற்றல் பெருக்கம் | 39 |
| • வேதாகமக் கதைசொல்லும் முறையிலே மாற்றம் | 40 |
| • சிறுவர் கதைப்பலகை பயிற்சி | 41 |
| • வேதாகமக் கதை சொல்லுதலுக்கு கூடுதல் உபகரணங்கள் | 42 |

# உலகெங்கிலுமுள்ள சிறுவர்கள்

**நம் ஊழியங்கள்**

தேவனுடைய மறுரூபமாக்கக் கூடிய நம்பிக்கையைக் கொண்டு
சிறுவர்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துதல்

**நாம் ஒரு நம்பிக்கையின் கலாச்சாரத்தை மாதிரியாக காட்டுகின்றோம், வாழ்கின்றோம்:**

முறுரூபமாக்கக்கூடியது
ஒப்பிடக்கூடியது
ஒத்துப்போகக்கூடியது



**நம் வழிநடத்தும் கொள்கைகள்**

ஜெபம் பங்காளராகுதல்
புதுமை வல்லமையூட்டுதல்
பெருகுதல் நம்பகரமாக இருத்தல்

**எங்கள் ஊழியங்களின் நோக்கம்**

சிறுவர்ளை அடைவதற்க்கு, தேவனை அறிந்திருப்பவர்களை உபயோகிப்போம்

kids around the world

### சிறுவர் கதை ஊழியம்

அவருடைய கதையையும், அவருடைய ஆவியானவரின் கிரியைகளைப் பற்றி சொல்வதின் மூலம், தேவனுடைய மறுரூபமாக்கும் நம்பிக்கையினால் சிறுவர்களின் வாழ்க்கையிலே ஒரு தாக்கத்தை ஏற்படுத்துதல்.

### சிறுவர் கதையின் நோக்கமும் எதிர்பார்ப்புகளும்

- சிறுவர் கதை / வேதாகமக் கதை சொல்லும் முறையைக் கொண்டு தேவனுடைய வார்த்தையை அறிமுகப் படுத்துதல்.
- தலைவர்கள், சிறுவர்களின் மனதிலும் இருதயத்திலும் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்து அவர்களை தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும் அவருடனும், பிறருடனும் நெருங்கி வர செய்தல்.
- சிறுவர் குழுவுடன் சிறுவர் கதை சொல்லும் முறையை மனதைரியத்துடன் உபயோகிக்க வேண்டும்.
- சிறுவர் அந்த கதையைக் கற்றுகொண்டு தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலே செயல் படுத்துவதோடல்லாமல் அவர்களின் நண்பர்கள், குடும்பத்தினரிடம் அதை மீண்டும் சொல்ல வேண்டும்.
- சிறுவர் கதை சொல்லும் முகாம்களை உலக அளவில் நடத்த, குழுக்களையும், மக்களையும் உருவாக்குதல்.

# வழிமுறைகள்

**பங்கு பெருவோர் வழிமுறைகள்:**

( உங்கள் வேதாகமக் கதை கூறல் பகுதியைத் தொடங்கும், பங்கெடுப்போருடன் கீழ்காணும் வழிமுறைகளைப்பற்றி கலந்துரையாடுங்கள்)

- அனைவரையும் வரவேற்கின்றோம்: ஒவ்வொருவரும் பங்குபெற ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்க விரும்புகின்றோம்.
- பங்குபெறுதல்: கலந்துரையாடலில் ஒவ்வொருவரும் பங்குபெறுவீர்கள் என்று நம்புகின்றோம். உங்களுக்கு பதில் தெரியாத கேள்வி உங்களிடம் கேட்கப்படுமேயென்றால் “எனக்கு தெரியவில்லை” என்று சொல்வது சரியே.
    - ஒத்துபோகாதிருத்தல்: சரியான ஒரு பதிலை நாம் எதிர்பார்ப்பதில்லை. பல்வேறு காரணங்களின் அடிப்படையிலே பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் பல்வேறு காரியங்களை வெளிப்படுத்துவார். நம் அனுபவங்களும், நாம் எவ்வாறு வளர்ந்தோம், நமக்கு என்ன தெரிந்திருக்கிறது போன்றவை ஒரே கதைக்கு பல்வேறு கண்ணோட்டங்களை அளிக்கக் கூடும்.
- நேர்மையாய் திறந்த மனதுடனிருங்கள்: நாம் நேர்மையாக இருந்து நமக்கு என்ன நடைபெறுகிறது என்பதை பிறருடன் பகிர்ந்துக்கொள்ளும் போதுதான் நாம் தேவனுடனும், பிறருடனும் நெருக்கமாக வளர இயலும். அநேக சமயங்களில் மற்ற சிறுவர்களும் நாம் எப்படி கஷ்டப்படுகின்றோமோ அவ்வாறாகவே கஷ்டப்படுகின்றனர் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.
- “எனக்கு, நான்” வாக்கியங்கள்: “இந்த சபை” அல்லது “அவர்கள்” அல்லது “நாம்” என்று பேசாமல் “நான், எனக்கு” என்று பேசுங்கள். தேவன் உங்களுக்கு என்ன சொல்லுகின்றாரென்று சொல்லுங்கள்.
- இப்போது நடைபெரும் அல்லது இதற்கு முன்னால் சொல்லப்பட்ட கதையைப் பற்றி மட்டும் பேசுங்கள்: அன்று கற்றுக்கொண்ட அல்லது முன்னர் கற்றுக்கொண்ட மற்ற கதைகளை பற்றி மட்டும் கலந்துரையாடுவதால் எல்லோருமே அதைப் பற்றி அறிந்திருப்பார்கள், அதனால் ஒரே தன்மை இருக்கும். குழுவினரால் ஏற்கனவே கலந்துரையாடப்படாத மற்ற வேதாகமக் கதைகளையோ கருத்துக்களையோ பங்கெடுப்போர் கொண்டுவரக் கூடாது.
- கற்பனை செய்துக்கொண்டு கேளுங்கள்: கதை சொல்லப்படும்போது உங்களை நீங்கள் அங்கே வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் என்ன பார்க்கின்றீர்கள், முகர்கின்றீர்கள், கேட்கின்றீர்கள்? மற்ற கதாப்பாத்திரங்கள் செய்வது என்ன? நீங்கள் எவ்வாறு உணர்கின்றீர்கள்?

**தலைவருக்கான வழிமுறைகள்**

- ஜெபம்: பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை கேட்பதற்காக தேவனுக்கு முன்பாக அமைதியாக இருப்பது முக்கியமானதாகும். இது தலைவரின் செயல்களைப் பற்றியோ, அதன் விளைவுகளைப் பற்றியதோ இல்லை ஆனால் மக்களின் வாழ்க்கையிலும், வாழ்க்கையின் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளைப் பற்றியதேயாகும்.

- உடன் – பயிலுவோர்: ஒரு தலைவராக, உங்களுக்கு எல்லா பதில்களும் தெரிந்திருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை – வேதாகப் பகுதிக்கும், பிறரிடத்திலும் பதிலை தெரிந்துக் கொள்ளும்படி நாடுங்கள். மற்ற பங்கெடுப்பாளரிடமிருந்து கற்றுக் கொண்வோம் என்று விசுவாசித்தே கதைசொல்லும் செயலுக்குள் செல்ல வேண்டும்.

- பாதுகாப்பான சூழல்: எதைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றாலும் மக்கள் பாதுகாப்பாக உணரவேண்டும், அதை கீழ்கண்ட காரியங்களால் உருவாக்கலாம்.
    - உங்கள் நேயர்களைப் பற்றி அறிந்திருத்தல்: ஆவிக்குரிய, உணர்வு, தனிப்பட்ட ரீதியாக.
    - உடல் ரீதியாக: அறையின் தட்பவெப்ப நிலை, அறையின் வடிவமைப்பும், சாதனங்களும்.
    - மனரீதியாக: மட்டமாகவோ தரக்குறைவாகவோ பேசக்கூடாது, உற்சாகப்படுத்தும் வகையிலே பேசவேண்டும்.
    - ஆவிக்குரிய ரீதியாக: ஒருவரைவிட மற்றொருவர் வேதத்தை அதிகமாக அறிந்திருப்பதில்லை; இயேசுவை விட சூப்பர் ஸ்டார் வேறு எவருமேயில்லை.

- தேவனுடைய சந்திப்பை எதிர்பாருங்கள்: தேவன் தம்முடைய கதையை நம்முடைய கதையுடன் சந்திக்க செய்வாரென்ற எதிர்பார்ப்புடன் கதைக்குள் செல்லவேண்டும். அநேக சமயங்களில், நாம் நமக்கு தெரிந்தவர்களை பங்கெடுப்பாளரின் மீது திணிக்க முயலுகின்றோம்.

- வெளிப்படையாயிருத்தல்: நாம் ,தகுந்தாற்போல் குழுவுடன் ஒன்றிய நிலையில் இருக்கவேண்டும், நாம் வெளிப்படையாவும், தவறு செய்யக் கூடியவர்கள் தான் என்ற நிலையிலும் இருக்க வேண்டும்.

- **கவனியுங்கள்**
    - பரிசுத்த ஆவியானவர்: ஒருவரின் பிரதிக் கிரியைக்குள் அல்லது பதிலுக்குள் ஆழமாக சென்று, இன்னும் அதிக கேள்விகளை கேள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்வதை கேட்கும் சமயங்களும் இருக்கும்; இது அனைவருக்கும் நடக்க வேண்டியதில்லை. மக்கள், “இயேசு, வேதம், அன்பு, தேவன்” பதில்களை கொடுக்க பழகியிருக்கின்றனர் – தகுதியாயிருக்குமேயென்றால் அதிக பொருத்தமான பதில்களை கேட்க வேண்டும்.
    - பங்கெடுப்போர்: உங்கள் பதில்களை கொடுப்பதற்கு துரிதமாக இராதேயுங்கள், இல்லையெனில் நான் இப்படிதான் செய்வேன் அல்லது நீங்கள் என்ன செய்யவேண்டுமென்றால்... என்று. மக்கள் என்ன சொல்கின்றார்களென்பதைக் கவனியுங்கள்; பங்கெடுப்போரின் கருத்துக்களையும், பதில்களையும், முன்பு கேட்ட கதைகளையும் இணைத்துப் பாருங்கள். அமைதிக்கு அஞ்ச வேண்டாம். அநேகதரம் நாம் அமைதியாக இருக்கும்போதுதான் பரிசுத்த ஆவியானவர் பேசுகின்றார்.
    - உங்களை: இது உங்களைப் பற்றியோ உங்களுக்கு என்ன தெரிந்திருக்கின்றதென்பதைப் பற்றியதோ இல்லை இது. உங்கள் மனதிலே ஓடிக்கொண்டிருக்கும் எண்ண அலைகளை கவனித்து அதை பிறருடனும் அவர்களின் பதில்களுடனும் இணைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் பதிலைக் கொண்டிருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை – தேவன் பதிலைக் கொடுப்பார்.

# அறிவாற்றல் பெருக்கம்

| அறிவாற்றல் | பலம் | கற்பித்தல் |
|---|---|---|
| வார்த்தை ஆற்றல் | • வார்த்தைகளை உபயோகித்தல்<br>• கவனித்தல்<br>• வாசித்தலும் எழுதுதலும்<br>• மொழியாற்றுதல்<br>• மனப்பாடம் செய்தல் | • கதையை சொல்லுதல் அல்லது வாசித்தல்<br>• பத்திரிக்கை எழுத்தாற்றலை உபயோகித்தல்<br>• மாணவர்களை கலந்துரையாடலில் ஈடுபடுத்துதல் |
| இசையாற்றல் | • இசை<br>• ஸ்ருதி<br>• ஸ்வரம் | • சத்தியங்களை பாடல்ளின் மூலம் கற்றல்<br>• பாடல் இயற்றுவதை ஊக்குவிக்கவும்<br>• இசையைக் கொண்டு ஏற்ற சூழலை |
| எண்ணாற்றல் / கணித ஆற்றல் | • எண்கள்<br>• தர்க்க சாஸ்திரம்<br>• அமைப்புகள்<br>• தீர்வுகாணல் | • கற்றது என்ன என்று பகுத்தறிதல்<br>• ஆராயத்தூண்டும், சிந்தனைத்தூண்டும்<br>• கேள்விகளைக் கேட்பது மாணவர்களை தீர்வுகாணலில் ஈடுபடுத்துவது |
| பாடம் ஆற்றல் | • பலவித கலைகள்<br>• ஓவியம்<br>• கற்பனை<br>• படங்களை உபயோகித்தல் | • படங்கள், ஓவியங்கள், வரை படங்கள், வீடியோக்களை உபயோகித்தல்<br>• மாணவர்கள் தங்கள் விளங்கிக்கொள்ளுதலை படங்களின் மூலம் தெரியப்படுத்தட்டும்<br>• கலை, கைத்திறன் செயல்முறைகளை திட்டமிடுங்கள் |
| உடல் ஆற்றல்<br>உடல்ரீதியாக<br>அனுபவரீதியாக | • விளையாட்டு<br>• நடனம்<br>• கைவினை ஆற்றல்<br>• நாடகம் | • கதைகளை நாடகமாக நடித்துக்காட்டுதல்<br>• சரீர அசைவுகள், விளையாட்டுகள், நடனங்கள் போன்றவற்றை உபயோகித்தல்.<br>• மாணவர்கள், தாங்கள் கற்பதின் மாதிரிகளை செய்ய சொல்லுங்கள். |
| மக்கள் ஆற்றல்:<br>பிறருடன்<br>கலந்துரையாடுதல் | • மற்றவருடன் வேலை<br>• செய்தல்<br>• பட்டிமன்றங்கள் அறிந்திருத்தல் | • கலந்துரையாடல் கற்கும் முறையை உபயோகிக்கவும் (சிறு குழு போன்றவை)<br>• சமூகப் பணி செய்தல்<br>• கலந்திருந்து ஒருவரையொருவர் அறிந்துக்கொள்ளும் நேரத்தை உட்படுத்த வேண்டும். |
| தனிநபர்<br>ஆற்றல் /<br>தியானம் | • தன்னை புரிந்துக்கொள்ளுதல்<br>• தன்னுள் ஆராய்தல்<br>• சுய ஊக்கம்<br>• தியானம் | • அமைதியாய் தியானம் செய்ய நேரம் ஒதுக்கு<br>• தனியாகப் படிக்க நேரங்களைத் திட்டமிடுங்கள்<br>• இருவர் இருவராக இணைந்து கற்றுக்கொண்டதை சுருக்கமாக சொல்லிப்பார்க்க வேண்டும்<br>• பத்திரிக்கை, வரைதல் |
| இயற்கை<br>ஆற்றல் | • திறந்த வெளிகள்<br>• இயற்கை | • இயற்கையுடனான செயல்கள்<br>• கதைகளை சொல்ல இயற்கைச் சூழலை உபயோகித்தல்<br>• கலந்துரையாடல்களைத் தொடங்கவோ அல்லது உவமையாகவோ, இயற்கையை உபயோகிக்கலாம். |

## வேதாகமக் கதைக் கூறலின் வடிவ மாற்றம்

வேதாகமக் கதைக் கூறலை உபயோகிப்பதிலும் அதைப் பற்றிக் கற்றுக்கொள்ளுதலிலும் மக்கள் சாதிக்கும் வடிவ மாற்றங்கள் தான் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. விஷேசமாக ஊழியங்களிலும், வேதபாட ஆயத்தங்களிலும் ஒரு குறிப்பிட்ட நடையை உபயோகித்தவர்கள் சந்திக்கும் மாற்றங்கள். சில சவால்கள் கதையிலுள்ள பொருளினாலும் மற்றவை பயிற்சியளிக்க நாம் உபயோகிக்கும் முறையிலும் இருக்கிறது. எல்லோருக்குமே அல்ல சிலருக்கு இது பொருந்தும்:

1. உரையாடல் நடையிலில்லாமல் கேள்விகள் கேட்பதின்மூலம் விபரங்களை அளிக்கலாம்.
2. கேள்விகளுக்கு கேள்விகளால் பதிலளிக்கலாம்.
3. ஆசிரியர் மையமாக இருப்பதில்லை; தேவனுடைய வார்த்தையே மையமாகும்.
4. முன்பு கற்பிக்க இயலாது என்று தள்ளப்பட்டதை ஆழமாக கற்பிக்க இது ஒரு திறந்த வாசல்.
5. சிந்தனையைத் தூண்டும் கேள்விகளை உபயோகிப்பதால், பரிசுத்த ஆவியானவர் கற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.
6. பாரம்பரியத்திலிருந்து வேறுபட்ட முறையால் பலனை பெற்றுக்கொள்ள இயலுகிறது.
7. வேதாகமக கதைக் கூறலின் அடிப்படையே பிறருக்கு கற்பிக்க மக்களைப் பயிற்றுவிப்பதே.
8. கடினமாக உழைத்து அடையும் இலக்கு சாதாரண பலனாக மாறிவிடுகிறது.
9. கற்பிக்கப் படுவோரால் கற்பிப்போர் கற்றுக்கொள்கின்றனர்.
10. கற்பித்தலானது புத்தகத்தை சார்ந்ததாக இராது.
11. ஒரு கிறிஸ்தவ சூழலுக்குள்ளேயும், வெளியேயும் ஊழியம் செய்ய மக்களை தேறியவர்களாக்குகிறது.
12. மக்கள் கண்டுபிடிக்கக் கூடியவர்களாகும்போது, ஆசிரியர் தகவல்களை அளிக்கின்றார்.
13. விபரங்கள் / செய்திகள் சொல்லபடுகிறதில்லை; கேள்விகளைக் கொண்டு அவர்களாகவே கண்டுபிடித்துக் கொள்கின்றனர்.
14. உயிரோட்டமுள்ள கலந்துரையாடல்கள் ஏற்படுகின்றது ஆனால் பொருளும், ஒழுங்கும் கட்டுக்குள்ளிருக்கிறது.
15. எல்லோருமே கண்டுபிடிக்க வேண்டுமென்பதிற்காக, ஞானமுள்ள பங்கெடுப்பாளர்கள் தங்கள் கருத்தை சொல்லாமல் இருத்தலின் முக்கியத்துவைத்தை அறிந்திருக்கின்றனர்.
16. ஆசிரியர் / கற்பிப்போர் நன்றாக கவனிக்க கற்றுக்கொள்கின்றனர். அவர்கள் நடத்துகிறவர்களிடமிருந்து கிடைக்கும் பதில்களுக்கு நன்றாய் உத்தரவளிக்க கற்றுக்கொண்டிருக்கின்றனர்.
17. கதை அல்லது வேதாகமத்திற்கு புறம்பே இருந்து தகவல்களை உபயோகிப்பது இல்லை.
18. கற்பிக்கப்பட்டோர் வாய்மொழி தொடர்பில் வல்லவராகின்றனர்.
19. குறிப்புகளை எழுதி வைத்துக்கொள்ளாமலே வேதவாக்கியங்களை பகிரிந்துக் கொள்ளவும், ஆயத்தம் செய்யும் ஆற்றலைப் பெற்றுக்கொள்கின்றனர்.
20. வார்த்தையும், பரிசுத்த ஆவியானவரும் வாழ்வை மறுரூபமாக்கும் வேலையை செய்ய நம்புகின்றனர்.
21. ஒரு பகுதியிலே அனைவரும் இணைந்து இருப்பதால் குழுவில் ஒற்றுமை இருக்கின்றது.
22. ஏற்கனவே ஆயத்தமாக்கப்பட்ட மனதில் வைத்திருக்கும் மனப்பட்டியலின் படி அல்லாமல் கதையிலுள்ள கருத்துக்களை கலந்தாலோசிக்க விரும்புகின்றனர்.
23. பிறருக்கு அதிக முக்கியமானதாக இருக்கும் ஆவிக்குரிய விபரங்களை இளைஞர் கண்டறிகின்றனர்.
24. கற்றறியார் தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆழமான ஆவிக்குரிய உண்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
25. கதையிலே பெற்று உட்கொள்ளப்பட்ட சத்தியம், அதை வாழ்விலே பொருந்தும்படி கற்போரை தூண்டுகிறது.
26. வேதவாக்கியங்களை நன்றாய் அறிந்தவரும், அறியாதவரும் ஒன்றாகக் கற்றுக்கொள்கின்றனர்.
27. சமூக – பொருளாதார மற்றும் குலம் கோத்திரம் போன்ற வேற்றுமைகளுக்கு இங்கே இடமில்லை.
28. தாங்கள் உயர்ந்தவர்களென்று தங்களைப் பற்றி உணர்ந்துக்கொண்டிருப்பவர் பிறரை தேவன் பார்ப்பதைப் போன்று அவர்களைப் பார்க்கத் தொடங்குகின்றனர்.
29. பிராயாசத்தோடு ஏற்படும் தியானம் தானாகவே ஏற்படுகின்றது.
30. ஒரு சிறியப் பகுதியிலே காணப்படும் ஆழமானக் காரியமானது எல்லோரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்குகின்றது.
31. கல்லாதவரும், கற்றறியாதவரும் கூட பகுத்தறிவோடு யோசிக்கின்றனர்.
32. வேதாகமக் கதை கூறலானது ஆசிரியர்களையும், கேட்போரையும் இன்னும் ஆழமாக யோசிக்கச் செய்கின்றது.
33. வேதவாக்கியப் பொருளை நினைவில் கொண்டிருத்தலானது, மனப்பாடம் செய்வதைப் போன்றதாகும், எளிமையானதும் கூட!
34. கற்றோர் அச்சடிக்கப்பட்ட பக்கங்களை பார்க்காமலே வேத பகுதிகளை கற்கின்றனர்.
35. வேதாகமக் கதை கூறதல் மூலம் தலைவராகலாம்.
36. பங்கெடுப்போரின் தேவைக்கேற்ப பயிற்சி நேரத்தை மாற்றியமைத்துக் கொள்ளலாம்.
37. ஆசிரியர்கள் எல்லாம் தெரிந்த மேதாவியர் போன்றில்லாமல், ஆர்வத்துடன் கற்போராகின்றனர்.
38. கதை மூலம் கற்பிக்கப்பட்டோர் கதைப் பொருளை நினைவில் வைத்துக் கொள்கின்றனர், பிறருடன் பகிர்ந்துக் கொள்கின்றனர்.

# சிறுவர் கதை பலகை பயிற்சி

படங்களை வெட்டுதல்:

- படங்களின் ஓரங்களை முதலில் மிகத் துல்லியமாக இல்லாமல் சதாரணமாக வெட்டி எடுத்துக் கொள்ளவேண்டும்.
- பின்னர் வெளிக்கோட்டிலே துல்லியமாக வெட்டவேண்டும்.
- ஒரு சமயத்தில் ஒரு கதையின் படங்களை வெட்டி எடுத்துக் கொள்ளலாம் இல்லையெனில் எல்லா கதைக்கான படங்களையும் வெட்டி எடுத்துக் கொள்ளலாம்.
- படங்களை சுத்தமாக வைத்துக் கொள்ள, கதைப் பலகையை உபயோகிக்கும் முன் கைகளை நன்றாக கழுவி சுத்தமாக்கிக் கொள்ளவும்.

படங்களைப் பாதுகாத்தல்

- கவனமாகக் கையாண்டால் இந்தப் படங்களை வாழ்நாள் முழுவதும் உபயோகிக்கலாம்.
- எல்லாப் படங்களையும் அதற்கான உறையிலே வைக்கவேண்டும்.
- உறையிலிருந்து படங்களை வெளியே எடுத்தால், அதை எவ்வளவு சீக்கிரமாக உறையிலே போட இயலுமோ அவ்வளவு சீக்கிரமாகவே போட்டுவிட வேண்டும்.
- பிளாஸ்டிக் உறையிலே அல்லது காகித உறையிலோ வைக்க வேண்டும்.
- எண் அல்லது வகையைப் பொருத்து பிரித்து வைக்க வேண்டும்.

படங்களை வெட்டுதல்:

- படங்களை வைத்து நீங்கள் தனியாகப் பயிற்சி எடுக்கவும், சிறுவர்கள் முன்பு இல்லை, அது ஒரு அதிசயமாக அவரிகளுக்கு இருக்க வேண்டும்!
- படங்களைப் பலகையிலே எங்கே வைக்க வேண்டுமென்பதைக் கதைப் புத்தகத்திலிருந்து தெரிந்துக்கொள்ளவும்.
- பலகையிலே படங்களை வைத்த பின்னர் அதை எடுக்கும் போது, கடைசிப் படத்திலிருந்து முதல் படம் வரை எடுக்க வேண்டும். உங்கள் வேதாகமத்திலே நீங்கள் வைப்பீர்களென்றால், முதல் படம் மேலே இருக்கும்படியாக இருக்கும். இயேசு சிறுவர்களை ஆசீர்வதிக்கும் கதையை செயல்முறையாகக் காட்டுங்கள்.
- சிறுவர் வரும்போதே பலகையிலே பின்புறக் காட்சி அல்லது இயற்கைக் காட்சியை வைத்துவிடவேண்டும். அது சிறுவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் இயேசு சிறுவர்களை ஆசீர்வதிக்கும் கதையை செயல்முறையாகக் காட்டுங்கள்.
- சிறுவர்கள் அறைக்குள் வரும்போதே அவர்களிடம் ஏதோ ஒரு படத்தைக் கொடுத்து, நீங்கள் கேட்கும்போதே அவர்கள் அதைக் கொண்டுவந்து பலகையிலே வைக்கும்படி சொல்லலாம் இது நிலையற்ற பிள்ளைகளுக்கு அதிக பலனளிக்கக் கூடியதாக இருக்கும் – ஏனெனில் சரியாக அதை செய்ய அவர்கள் அதிக கவனத்துடன் இருப்பர்!

குறிப்புகள்:

- பலகையின் மேலிருக்கும் உங்கள் கண்ணோட்டத்தை கவனியுங்கள். சிறிய படங்களை பலகையின் மேல் உயரமாக வைப்பதால், அது தூரமாக இருப்பதைப் போன்று தோன்றும்.
  தொலைந்து போன ஆடு கதையை செயல்முறைப் படுத்திக் கொள்ளுங்கள்.
- படங்களை அதிக உயரத்தில் வைக்கவேண்டாம். அவற்றை நேராகவும், சமமாகவும் வைக்கவேண்டும்.
  மக்கள் படங்களைக் கொண்டு செய்துக்காட்டவும்.
- கதை நிதர்சனமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவும்.
- உங்கள் கற்பனைத்திறனை உபயோகிக்கவும், உருவாக்கும் திறனுடனிருங்கள்.

# BIBLE STORYING RESOURCES

International Mission Board (IMB) www.imb.org
- Put *storying* in the search line

International Orality Network www.internationaloralitynetwork.com
- Resources
- Facebook: International Orality Network

Steven James www.stevenjames.net
- Resources and downloadable notes (Book: *Creative Storytelling Guide.* Standard Pub. 2002.)

Kids Around the World www.kidsaroundtheworld.com
- KIDS Storyboard sets, curriculum, training materials
- Facebook: Kids Around the World; KIDStory

Michael Novelli
- Book: *Shaped By the Story.* Zondervan. 2008

Orality Strategies www.oralitystrategies.org
- Story sets, videos, articles
- Facebook: Orality Strategies

Real Life Ministries/NavPress www.rlmchurchtraininganddevelopment.com
- Books and curriculum
- Walk Thru the Bible. *Story Thru the Bible.* 2011

Simply the Story & God's Story Project www.SimplytheStory.com www.gods-story.org
- Training, resources and downloadable handbook

Mark Snowden www.truthsticks.com
- Book: *Truth That Sticks* with Avery Willis, Navpress. 2010
- Facebook: TruthSticks

Scriptures in Use www.siutraining.org
- Download *Making Disciples of Oral Learners;* Online Training, resources, articles

Soma Communities www.somacommunities.org/soma-school
- Training, curriculum

ST4T: www.storyingt4t.ning.com
- Training manual and stories specifically for discipling children (ST4Kids)

Story4All www.story4all.com
- Weekly Podcast: story4all on Itunes

John Walsh www.bibletelling.com
- Training, curriculum (Book: *The Art of Storytelling.* Moody Publishers. 2003)
- Facebook: Bibletelling

kids around the world

www.kidsaroundtheworld.com